19/1

நல்லை, சட்டநாதர் சிவன் தேவஸ்தானம்

# சிவ சிவ

நல்லூர் சட்டநாத ஈஸ்வரர் கோயிலின் தோற்றம் தொடர்பான பிரச்சினைகள் : ஒரு வரலாற்றுக் கண்ணோட்டம்

செ. கிருஷ்ணராசா, M.A
விரிவுரையாளர் : யாழ்ப்பாண



RUTNAM LIBRARY
19/1

# சித்திரத்திருத்தேர்
# வெள்ளோட்டச் சிறப்பு மலர்

With the Best Gift to the
Poly Cultural Institute
By
Krishnarajah, S.
25th May 1986.



# வெள்ளோட்டம்

## நல்லூர், சட்டநாதர் சிவன்

## சித்திரத்திருத்தேர்

## வெள்ளோட்டச்

## சிறப்பு மலர்

தொகுத்தவர் ; ந. விஜயேந்திரன்

திகதி : **23-3-1986**

# நல்லூர், சட்டநாதர் சிவன் தேர்த்திருப்பணிச் சபை

---

| | |
|---|---|
| தலைவர்:- | சி. கனகரெத்தினம் |
| உபதலைவர்:- | கு. கிட்ணர் |
| செயலாளர்:- | அ. இராசரெத்தினம் |
| இணைச்செயலாளர்:- | இ. சந்திரகுமார் |
| பொருளாளர்கள்:- | ச. பொ. இராசலிங்கம் |
| | அ. வாமதேவன் |

## செயற்குழு உதவியாளர்கள்

| | |
|---|---|
| க. ஏகாம்பரம் | க. இராசரெத்தினம் |
| க. சந்தானகோபால் | செ. வல்லிபுரம் |
| வே. இராமலிங்கம் | சோ. கனகசபாபதி |
| நா. இரகுமார் | பொ. தியாகராசா |
| கா. அரசரெத்தினம் | இ. ஜெயராசா |
| ம. தவராசா | |

| | |
|---|---|
| முக்கிய ஆலோசகர்கள்:- | க. கேசவன் |
| | ந. விஜயேந்திரன் |
| | அ. பரமேஸ்வரன் |

நல்லூர், சட்டநாதர் தேர்த் திருப்பணி சபையினர்



EVELYN RUTNAM LIBRARY JAFFNA

# இம்மலரில்.....

சிலவழிபாடும், தமிழர் வரலாறும் தொன்மையானது. இவை இரண்டும் இணைந்து ஒளிர்வன சிவ ஆலயங்கள். இவ்வகையினவுள் ஒன்று யாழ்ப்பாணம் நல்லூர் சட்டநாதர் கோவில். இக்கோவிலுக்கான சித்திரத்தேர் செய்யும்பணி திவ்ய ஜீவன சங்கத்தலைவர் திரு. சி. கனகரெத்தினத்தின் தலைமையிலான தேர்த்திருப்பணி சபையால் (1980 — 1985) முன்னெடுக்கப்பட்டது.

சிவத்தமிழ் மக்களின் தொண்டாக நிதி, பொருள், உழைப்புகள் கிடைத்தன தேர்செய்யும் திருப்பணி திருநெல்வேலி திரு க. செல்வராசா குழுவினருக்கு வழங்கப்பட்டது. இதன் பிரகாரம் 1982 பங்குனியில், கோவில் பிரதமகுரு அமரர், சிவஸ்ரீ ச. குமாரசாமிக்குருக்கள் சமயகிரியை பூசைகளை நிறைவேற்ற, அமரர் திரு. அரசபிள்ளை நடராசா அவர்களால் அச்சு வைக்கப்பட்டது. தேரும் உருவாகிவிட்டது. அதன் சிறப்பினைக்கூற மலரும் தயாராகிவிட்டது.

இம்மலரில் தேர்த்திருப்பணிச்சபைத்தலைவர் உரை தொடக்க உருவாகிறது. ஆதீன கர்த்தாக்கள் ஆசி வழங்கியுள்ளார்கள். பண்டிதர் சு. இராசையா அவர்கள் கவிதாஞ்சலி செய்துள்ளார்கள் யாழ். பல்கலைக்கழக இந்துநாகரீகத் துறை போதனைபீடத்தலைவர், பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள் தேர்த்திருவிழாபற்றி விளக்கியுள்ளார். சட்டநாதர் கோவிலின் தொன்மை வரலாற்றை யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை விரிவுரையாளர் கிருஷ்ணராஜா ஆய்ந்துள்ளார். தொடர்ந்து உள் சிற்பங்களின் படங்கள் யாழ். தொல்பொருள் காட்சிச்சாலையில் நல்லூரில் கண்டெடுக்கப்பட்ட புராதன சின்னங்கள் ஆய்வாளர்களுக்கு உதவும். திரு. புதுவை இரத்தினம் தேரில் சிற்பங்களின் சிறப்புகள் குறித்து விளக்கியுள்ளார். தொடர்வது ஸ்தபதி க. செல்வராசாவின் கட்டுரை.

பின்னணியில் வர்த்தகர்களின் விளம்பரங்கள் அணிசெய்ய இத்தர்ம காரியத்திற்கு உதவிய சிவத்தமிழ் உலகோர்க்கு தேர்த்திருப்பணிச் சபையார் நன்றி நவில்கின்றார்கள். தேர் உருவாகினால் மட்டும் போதுமா? தேர் மண்டபம் அமைக்கவும் வாருங்கள் உதவுங்கள் என்று கேட்கிறார்கள்.

தேர் தயாராகிவிட்டது. நல்லை நகரில் மேலும் ஒரு சித்திரத்திருத்தேரும் காட்சி. இன்று (23-3-86) வெள்ளோட்டம். நாளை தேர்த்திருவிழா வடம் பிடிக்க வாரீர். பக்திக்கு உருகொடுப்பீர். அவ்வாறு கருணாமூர்த்தி - காரணமில்லாமலே கருணை காட்டும் அம்மையப்பனின் அருள் பெறுவீர்.

# மறப்பதற்கில்லை....



நல்லூர் சட்டநாதர் சிவன் கோயில் ஓர் சரித்திரப் பிரசித்திபெற்ற தேவஸ்தானம் நல்லூர் சங்கிலித்தோப்பை அண்டிஉள்ள இக் கோயில் சங்கிலி மன்னனல் போற்றி ஆதரிக்கப் பட்டு வந்தது. யாவரும் அறிவீர்கள் இக் கோயிலுக்கு ஒரு சித்திரத்தேர் செய்யும் நோக்குடன் ஓர் திருப்பணிச்சபையை உருவாக்கி அத்திருப்பணிக்கு மெய்யன்பர்களிடமிருந்து சுமார் 5 லட்சம் ரூபா நிதிதிரட்டி திருநெல்வேலி சிற்பக்கலைஞர் திரு. செல்வராசா அவர்களைக் கொண்டு ஒருஅழகிய சித்திரத்தேரை அமைத்து 23-03-1986ல் தேர் வெள்ளோட்டமும் 24-03-1986ல் தேர்திருவிழாவும் நடைபெற இருப்பது நமக்கு மிகமகிழ்ச்சியை அளிக்கிறது கலையழகு மிக்க இரதமாக இன்று நம் முன் காட்சியளிக்கின்றது இந்தநற் கைங்கரியம் தெய்வ சங்கற்பமாக இனிதேறியதற்காக நல்லநாயகி சமேத நல்லைநாதப் பெருமானுக்கு முதலில் நன்றி கூறி துதி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

இந்த அரிய சிந்தனையைச் செயலாக்குவதற்குமுன் வந்துழைத்த திருப்பணிச் சபை நிர்வாகிகளின் சேவை பெரிதும் பாராட்டத்தக்கதாகும்.

நல்லைநாதப்பெருமான் அழகுத்தேரில் வீதிவலம்வரும் கோலக்காட்சியை விரைவில் காணவேண்டும் என்ற பேராவலினல் நன்கொடைகளை தாராளமாக வழங்கி உற்சாகம் ஊட்டிய தயாளமனம் படைத்த அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

காண்போர் களிப்பேறும்வகையில் திறம்பட தன்கைத்திறனல் கலை வண்ணம் காட்டி சித்திரத்தேரை சிறப்புற அமைத்துத் தந்த பிரபல சிற்பக்கலைஞர் திரு. செல்வராசாவையும் அவரது உதவியாளர்களையும் எவ்வளவு பாராட்டினலும் தகும் தேரினைக் கண்ணுறும் அடியார்களுக்கு ஏற்படும் மனநிறைவே இக்கலைஞானத்துக்கு செலுத்தப்படும் நன்றியாகும்.

தேர்த்திருப்பணி மலருக்கு ஆசிச்செய்திகள் வழங்கிய பிரமுகர்கள் பெருமனதுடன் விளம்பரம் தந்துதவிய வாகனமலருக்கான படங்களை எடுத்துத்தந்த ஸ்ரூடியோ நிர்வாகிகள் மலரைத்தயாரிப்பதற்கு அனுசரணையாக இருந்த அன்பர்கள் அனைவருக்கும் நமது நன்றிகள் உரித்தாகுக.

சம்பந்தப்பட்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவிப்பதுடன் அவர்கள் யாவருக்கும் நல்லநாதப் பெருமானின் கிருபகடாட்சம்கிட்ட வேண்டுமெனப் பிரார்த்தித்துக்கொள்ளுகின்றோம்.

**சி. கனகரத்தினம்**
தலைவர்
தேர்த்திருப்பணிச்சபை

உ குருபாதம்



சிவநேயச்செல்வர்களே,

நல்லூர், நல்லைநாயகி சமேத நல்லைநாத சுவாமிக்கு அழகிய சித்திரத்தேர் அமைத்து வெள்ளோட்டம் காணவிருப்பதறிந்து பெருமகிழ்ச்சியடைகிறோம் ஆலய விழாக்களில் முக்கிய ஸ்தானம் வகிப்பது இரதோற்சவம் அதுவும் எல்லாம்வல்ல பராசக்திக்கும் பரம்பொருளுக்கும் அன்பர்கள் எடுக்கும் இக்கைங்கரியம் மிகமிக மேன்மையுடைத்தாம்.

பிரபஞ்ச வாழ்க்கையைத் தேர்ந்துகொள்வது ''தேர்'' என்று தத்துவார்த்த மாக ஆன்றோர் அருளிப்போந்தனர் எனவேதான் இரத அடித்தளத்தில் அமைக்கப் பெறும் சிற்பங்களில் மானுடப்பிறப்பு முதல் இறப்புவரை சம்சார நிகழ்வுகளைக் கண்டுகொள்ளலாம் ஆகக்கீழ்த்தளத்தில் அமைக்கப்பெறும் ஆமை வடிவம் ஸ்ரீமந் நாராயணன் கூர்மாவதாரமெடுத்துப் பூலோகத்தைக் காத்தருளிய சின்னமாகும். இரதத்தின் முடியிலிருந்து அடிவரை அமைக்கப்பெறும் சிற்பங்களெல்லாம் ஆழ்ந்த தத்துவார்த்தங்களை விளக்குவனவாகும் இவற்றைச்சைவ அன்பர்கள் அறிந்துகொள்ள வேண்டும் எனலாம் ஈசன்செயல்

இப்பெரும் கைங்கரியத்துக்கு ஆக்கமும் ஊக்கமுமளித்த அன்பர்களையும் சுய நலமிலாத்தொண்டுகள் புரிந்த அன்பர்களையும் சிவாச்சாரியப்பெருமக்களையும் ஸ்தப தியார் சிற்பாசாரியார்களையும் ஆலய அறங்காவலர்களையும் உளமாரப்பாராட்டி எமது ஆசிகளை வழங்குகின்றோம்.

ஓம் சாந்தி. சாந்தி, சாந்தி

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாசாரிய ஸ்வாமிகள்**

# சட்டநாதப்பெருமானுக்கு ஒரு சித்திரத்திருத்தேர்

திருக்கோயில்களைச் சூழவுள்ள வெளிவீதியைத் தேரோடும் வீதியென்று சிறப்பாக போற்றுவார்கள். சிவாலயத்தின் சிறந்த ஒரு அங்கமாக விளங்குவது தேர் இதனுடைய அமைப்புச் சிவாலயஅமைப்பைப்போன்றதாகும் மகோற்சவத்தில் ஒன்றுக விளங்கும் இரதோற்சவம் சங்காரத்தொழிலை விளக்குவதாகும்.

அப்பணி செஞ்சடை ஆதிபுரதானன் முப்புரம் சென்றனர்
என்பர்கள் மூடர்கள் முப்புரம் என்பது மும்மலக்காரியம்

என்பது திருமந்திரப்பாடல் சிவபெருமான் திரிபுரங்களைத் தகனம் செய்தமையை நினைப்பூட்டி அடிப்படைத்தத்துவமாகவும் விளக்குவது தேர்உற்சவமாகும்.

நல்லூர்ப்பதியில் சிறந்ததும் பழமைவாய்ந்ததும் வரலாற்றுச்சிறப்புமிக்கதுமாக விளங்குவது சட்டநாதர் கோயிலாகும் இங்கு எழுந்தருளியிருக்கும் பெருமானுக்கு நல்லைநாதசுவாமி என்றும் அம்பிகைக்கு நல்லைநாயகி என்றும் திருநாமங்கள் சூடி வழிபடுவார்கள் நல்லூரை இராசதானியாகக்கொண்டு ஆட்சி செய்த தமிழ்மன்னர்களின் வழிபாட்டுத்தலமாக இவ்வாலயம் விளங்கிவந்துள்ளது. பங்குனி உத்தரத்தை முன்னிட்டு இங்கு மகோற்சவம் நடைபெறும் ஒழுங்கு உண்டு இவ்வாண்டு முதன் முதலாகப் பெருமானுக்கு சித்திரத்தேரொன்றை அமைத்துச் சிறப்புச் செய்திருக்கிறார்கள் பக்தர்கள் எம்பெருமான் தேரேறிவரும் அற்புதக்காட்சியைத் தரிசிப்பது மானிடப்பிறவியில் ஒரு புண்ணியச்செயலாகும் தேரூர்ந்த திரிபுராந்தகன் என்று இறைவனைக்குறிப்பிடுவர் பூமியையே ஆண்டவன் இரதமாகக் கொண்டிருக்கிறான். பிரம்மனே இந்த இரதத்தின் சாரதி ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களை அழிப்பதே சங்காரத்தொழிலாகும் இதே தத்துவமே தேர்விழாவின் உட்கருத்தாகும்

எங்கள் பழி, பாவம், வினை, பகை அனைத்தையும் போக்கி கருணைவெள்ளத்தில் மூழ்கவைப்பவன் இறைவன்ஒருவனே. ஆகவே தேர்உற்சவநாள் எமக்கு விமோசனமளிக்கும் திருநாளாகும் என்பதை உணர்ந்து தரிசித்துப்பேரானந்தமடைவோமாக.

**தங்கம்மா அப்பாக்குட்டி**
தலைவர்
ஸ்ரீ துர்க்கா தேவிஆலயம், தெல்லிப்பழை

# திறமைக்கு எனது வாழ்த்துக்கள் !



ஆச்சபூர்வமான தேர்த்திருப்பணி சிவசேவையைப்பூர்த்திசெய்து நல்லைநாயகி சமேத நல்லைநாதசுவாமியின் சிறப்பையும் மகத்துவத்தையும் வெளிப்படுத்திய நல்லூர் சட்டநாதர் சிவன்தேவஸ்தான தேர்த்திருப்பணிச்சபையினருக்கும், அவர்களுக்கு நிதிஉதவியும் வேண்டிய ஒத்துழைப்பையும் நல்கிய சிவனடியார்களுக்கும், பேரன்பர்களுக்கும், சிறந்தமுறையில் சித்திரத்தேரை ஆக்கிக்கொடுத்த தேர்சிற்பாசாரிகளுக்கும், ஒத்துழைப்பளித்த கோவில் பிரதம குருக்களுக்கும் பூசகர்களுக்கும் ஆதரவு நல்கியஅனைவருக்கும் எனது பணிவன்பான நன்றி

சித்திரத்தேர் வெள்ளோட்டத்தை அடுத்து தேர்த்திருப்பணிச்சபையினரால் வெளியிடப்படும் ''தேர்வெள்ளோட்டச்சிறப்புமலர்'' பல சிறப்புக்களைத்தாங்கி வெளிவந்துள்ளது இச்சிறப்புமலரைப்பல சிரமங்களின்மத்தியில் வெளியிடும் வெளியீட்டுக் குழுவினருக்கும் எனது நன்றி.

இவர்கள் அனைவரினதும் சிவத்தொண்டு மேன்மேலும் தொடர்ந்து சிறக்க வாழ்த்துகின்றேன்.

என்றும் நாம் சிவத்தொண்டு செய்வோம்
என்றும் நம்மை சிவன் நன்றே வாழ்விப்பார்

**சி. துரைராசா**
முகாமையாளர்
நல்லூர் சட்டநாதர் சிவன்தேவஸ்தானம்

**சிவநேச செல்வர்களே !**

தேர் திருப்பணிக்கு நிதியுதவி, பொருள் கொடுத்தவர்களின் விபரங்களும், தேர்மண்டபம் அமைக்க உதவுவோர்களின் விபரமும் தேர்மண்டப திறப்புவிழா அன்று தனிப்பிரதியாக அச்சிட்டு வெளியிடப்படும்.

# தேர்த் திருவிழா

கா கைலாசநாதக்குருக்கள்
(பேராசிரியர், இந்துநாகரீகம்)

இலங்கையில் சைவாலயங்களில் பேணப்பட்டு வருவது ஆகமமரபு இம்மரபைத் தழுவியே ஆகமவிதிகளுக்கமைய ஆலயம் வடிவம் பெறுகின்றது ஆலயங்களில் நிறுவுதற்குரிய திருவுருவங்கள் வடிக்கப்படுகின்றன கிரியைகளும் நித்தியக்கிரியைகள், நைமித்திகக்கிரியைகள் என இதற்கமைய வகைப்படுத்தப்பட்டு நிகழ்த்தப்பெறுவன.

தேவாலயம் ஒன்றில் ஆண்டு முழுவதும் நிகழ்ந்துவரும் கிரியைகளுள் சிலநாள் தோறும் நிகழ்த்தற்குரியன சிலவாரத்துக்கு ஒருமுறையும் சிலபட்சத்திற்கொருமுறையும், சிலமாதத்திற்கு ஒருமுறையும் நிகழக்காண்கின்றோம். இவற்றுள் மிகச்சில ஆண்டுக்கொருமுறை நிகழ்த்தப்பெறுவன.

கோயில்களில் வருடம் ஒருமுறை நிகழும் பெருந்திருவிழா இவ்வகையைச்சார்ந்தது இதுபெரும் விழாவாக அமைவதனல் இதற்குப் பிரமோற்சவம் என்றபெயர் வழங்குகின்றது. 'பிரம' என்பது 'பெரும்' எனப்பொருள் தரும் பிரமோற்சவம் என்னும் இப்பெரும் திருவிழா கொடியேறி நிகழும் திருவிழா எனவும் கூறப்படுகின்றது. இப்பிரமோற்சவம் கொடியேற்றும் வைபவத்துடன் ஆரம்பிக்கும் இக்கொடியேற்றம் துவஜாரோகணம் எனவும் பெயர்பெறும் இப்பிரமோற்சவத்தினிறுதியில் நிகழ்வது தீர்த்தத்திருவிழா பிரமோற்சவம் தொடர்ச்சியாக பத்துத்தினங்களோ, இருபத்தேழு தினங்களோ, அன்றி பத்துக்கும் இருபத்தேழுக்கும் இடையில்வரும் எண்ணைக்கொண்ட தினங்களோ, கோயிலில் நிகழ்ந்துவரும் வழமைக்கிணங்க நடைபெறும் பிரமோற்சவத்தில் விழாக்கள் வகைவகையாக நிகழ்வன விழாக்களில் நிகழும் நிகழ்ச்சி அவ்வத்தினத்திற்குச் சிறப்பூட்டும் இவ்விழாவில் முக்கிய இடம்வகிப்பது முதனுள் நிகழும் கொடியேற்றுவைபவமன்று ஆகமரீதியாக நோக்குமிடத்துத் இவவிழாவரிசையில் இடம்பெறும் தேர்த்திருவிழாவும் முக்கியமானதன்று என்பது தெளிவாகும் தீர்த்தத்திருவிழாவே பிரமோற்சவத்தில் நிகழும். முக்கிய நிகழ்ச்சி என்பதை நுணுகி நோக்கும் பொழுதே உணரமுடிகிறது தீர்த்தத்திருவிழா நிகழும் தினத்தை அடிப்படையாகக்கொண்டே பிரமோற்சவம் முழு அமைப்பினையும் பெறுகின்றது. அமாவாசை பௌர்ணிமை, ஒவ்வொரு மாதத்துடன் இணைத்துக்கூறப்படுவதும், சாந்திரமானப்படி பௌர்ணிமையுடன் தொடர்பு பெறுவதுமான சிறப்புப் பெற்ற சில நட்சத்திரங்கள் சங்கிராந்தி புண்ணியகாலங்கள், முதலியனவற்றுள் ஏதாவதொன்று பொருந்தும் தினமே தீர்த்தத்திருவிழாவிற்கு உரியது. இதிலிருந்து பின்னேக்கிக் கணக்கிட்டு, இத்தீர்த்தத்தினம் இறுதி நாளாயமையும் வண்ணம் பத்துத் தினங்களோ, அல்லது பன்னிரண்டு, பதினெட்டு, இருபத்தைந்து, இருபத்தேழு ஆகிய எண்ணிக்கையினதானதினங்கள் விழாத்தினங்களாயமையும் வகையில் கணக்கிட்டுத் தொடக்கதினத்தில் துவஜாரோகணம் என்னும் கொடியேற்று வைபவம் நிகழ்த்துவது மரபு தீர்த்தத்தினத்தையும், விழா நிகழும் தினங்களின் எண்ணிக்கையையும் விரும்பியபடி அவ்வப்போது மாற்றியமைத்தல் பொருந்தாது தீர்த்ததினத்தை முக்கிய நிகழ்ச்சியாகக் கொண்டே இவ்வாறு கொடியேற்றுந்தினம் நிச்சயிக்கப்படுவதையும், ஏனைய திருவிழா நிகழ்ச்சிகள் அவ்வக்கோயிற் பாரம்பரியத்திற்கேற்ப இடையிலுள்ள தினங்களில் நிகழ்வதையும் கருத்தூன்றி அவதானிக்கும் பொழுது தீர்த்தத்திருவிழாவிற்கு உள்ள முக்கியத்துவம் தெளிவாகத்தெரிகிறது அடியவர் திருவிழா பிட்சாட

னர் திருவிழா, வேட்டைத்திருவிழா, நடேசர்திருவிழா திருக்கலியாணத் திருவிழா முதலியன அவ்வத்தேவாலயங்களில் ஆங்காங்கு கடைப்பிடிக்கப்பட்டு வரும்வழமைக் கேற்பப் பிரமோற்சவதினங்களில் நடைபெறுவன இவற்றுள் ஒன்றே தேர்த்திருவிழா இது பெரும்பாலும் தீர்த்தத்திருவிழாவிற்கு முதனாள் நிகழும் வழக்கம் இருப்பினும் கொடியேற்றியபின் ஏழாம் நாளன்று நிகழும் முறையும் கூறப்பட்டுள்ளது இது பாரதநாட்டில் ஆகமமரபைப்பேணும் கோயில்கள் சிலவற்றில் நிகழக்காணலாம். ஆகமவடிப்படையிலான உற்சவவிதியை அநுசரித்தே இது இவ்வாறு நிகழ்கின்றது

பிரமோற்சவத்தில் தேர்த்திருவிழாவுக்கு முக்கியத்துவம் வாய்ந்த தனிஇடம் குறிப்பிடப்படாதிருப்பினும், விழாநிகழும் முறையையும், அதன் அமைப்பையும் காரணமாகக்கொண்டு தேர்த்திருவிழாவே ஏனைய விழாக்களைக் காட்டிலும் முக்கிய மானதாக ஆகிவிடுகின்றது இதன் காரணங்களைச் சுருக்கமாக ஆராயலாம்.

கலையமிசங்கள் பொலிந்து கண்களையும் கருத்தையும் கவரும் வனப்புமிக்க தேரில் இறைவன் பவனிவருவது இத்தேர்த்திருவிழாத் தினத்தன்றே என்பது தேர் விழா முக்கியமானதாயமைந்தற்குரிய முதற்காரணம். இறைவனது திருவுருவப்பொ லிவு கலைச்சிறப்பு மிக்கது அவனுக்குத்தேரில் பவனி வருவதற்கென நிகழ்த்தப்படும். பொருத்தமான அலங்காரம், இதற்கேற்ப அவன் அணிந்து விளங்கும் ஆபரணங்கள் மாலைகள் முதலிய யாவுமே கலைச்செறிவு மிக்கதாக இருப்பதனால், இங்கு இறைவ னின் கம்பீரமான தோற்றம் நிகழ்வதால் இக்கண்கொள்ளாக் காட்சியைப்பெற வாய்ப்புத்தரும் இவ்விழா விழாக்கள் யாவற்றுள்ளும் முக்கியமானதாக அமைவதில் வியப்பெதுவும் இல்லை. இம்முக்கியத்துவம் பற்றியே விழா கோலாகலமாக நிகழும் சந்தர்ப்பம் பிறக்கின்றது இதன் விளைவாக மக்கள்பெருந்திரளாகக் குழுமி இவ்விழா வைச் சிறப்பிக்கும் சூழ்நிலை தானே உருவாகி விடுகிறது. மக்கள் திரளுவதையடுத் துக்கடைகள் கடைத்தெருக்கள் அங்காடிகள் அறச்சாலைகள் முதலியன பெருகின்றன மனவெழுச்சிக்கும் குதூகலத்துக்கும் உகந்த கலகலப்பும் சனப்பெருக்கமும் மிகுந்து விளங்கும் இவவிழா விழாக்களுள் தலையிடம்வகிப்பது தவிர்க்கமுடியாததே.

இன்னொரு தனிப்பட்ட காரணத்தினாலும் தேர்த்திருவிழா முக்கியமானதாகின் றது. இவ்விழாவில் தேர்பவனிவருவதற்காக தேரில் பொருத்தப்பட்ட வடம்பிடித்து இழுத்து இறைவனைத் தேரில் பவனிவரச்செய்யும் நிகழ்ச்சியே முக்கியமானது எவ்வித மான பேதமும்இன்றி, பாகுபாடுகளனைத்தையுமறவே களைந்து, பலதரப்பட்டோரும் பலநிலைப்பட்டோரும் உயர்ந்தோர் தாழ்ந்தோர், வறியோர் செல்வர், முதியோர் இளைஞர் எனப்படும் பலவகை வேற்றுமைகளை மறந்து, தோளோடு தோள்இணையும் வண்ணம் வரிசையாக நெருங்கிநின்று தேர்வடத்தைப்பற்றி இழுக்கும் வைபவத்தில் எல்லோருமே சமமாகப்பங்கு பற்றும் வாய்ப்பினைத் தரும்விழா தேர்த்திருவிழா ஒன்றேயாகும் எனவே இவ்விழாவில் பங்குபற்றுவோரின் எண்ணிக்கை பெருகும் இயல்பினது பெரும் எண்ணிக்கையினர் பங்குகொள்ளும் விழாவின் முக்கியத்துவமும் வளருகின்றது.

மேலும் தேரில் நிரந்தரமாக இடம்பெற்று அழகுபெருக்கும் அமிசங்கள் தனிச் சிறப்பு வாய்ந்தவை திருவிழாத்தினங்களில் அவ்வப்போது மட்டும் இறைவன் உற்சவரீதி யாக புனைந்து காட்சிதருங் கோலங்களான பிட்சாடனர்த் திருக்கோலம் திருக்கலியானத் திருக்கோலம், அடியவர்க்கு குறிப்பாக விக்கிநேசுவரர், சண்டேசுவரர், இராவணன்ஆகி யோருக்குஅநுக்கிரகித்த கோலங்களைக்காட்டும் விக்நேசுவரானுக்ரஹ மூர்த்தியினதும்

சண்டேசுவரானுக்கிரகமூர்த்தியினதும், இராவணனுநுக்கிரகமூர்த்தியினதும் திருக்கோலங்களும், வேறு இறைவனது வீரட்டங்களும், பெருமைகளும், திருவிளையாடல் நிகழ்ச்சிகளும் ஒருங்கு தேரில் சித்தரிக்கப்பட்டிருப்பதனால், அவ்வந்நிகழ்ச்சிபற்றித் தனித்தனி நிகழும் விழாவில் இறைவனைத்தரிசிக்க முடியாதவர்கள் தேர்த்திருவிழாவன்று இறைவன்தேரில்இவர்ந்து பவனிவரும்வேளை அந்நிகழ்ச்சிகள் சூழ்ந்த அமைப்பில் தேரில், இறைவனைத்தரிசிக்கும் வாய்ப்பினைப் பெறுகின்றனர் இதனால் தேரில் இவர்ந்துபவனிவரும் இறைவன் அளப்பரிய பெரும் தரிசனப்பேற்றை யளிக்கவல்ல நிலையினனுய்த்திகழ்ந்து தேர்த்திருவிழாவின் பெருமையை உயர்த்துகிறான்.

தேரின் அடிப்பகுதியிலிருந்து படிப்படியாக சுவாமி அமருவதற்குரிய பீடம் வரை அகன்று கொண்டே போகும்பகுதி சிற்பநுட்பங்களை வெளிப்படுத்துவதற்கு நிலைக்களனாக அமையும் இப்பகுதி ஐந்தாகவோ மூன்றாகவோ வகுக்கப்பட்டு இவ்வைந்து சுற்றுக்களிலோ மூன்றுசுற்றுக்களிலோ தேரிலெழுந்தருளும் இறைவன்பெருமை கூறும் தோற்றங்கள் சித்தரிக்கப்படுவன இறைவனின் மூர்த்திபேதங்கள் சிறப்பிக்கப்படும் தலங்களில் நிகழ்த்திய திருவிளையாடல்கள் தேருடன் தொடர்புகொண்ட கோவில்பற்றிய தல வரலாற்றுச்சம்பவங்கள், அடியவர்கள் திருக்கோலங்கள் பக்தியை வளர்க்க வல்ல நிகழ்ச்சிகள் வாழ்க்கையின் பிரதிபிம்பங்கள் இங்கு சித்திரிக்கப்பட்டு இருப்பன சிற்பியின் திறமையை வெளிப்படுத்தும் வாய்ப்பு, திருக்கோயில்களில், விமானங்களிலும் தூண்களிலும் கோபுரங்களிலும் இருப்பதுபோன்று இங்கும் பெருமளவில் உண்டு. கோயில்களில் அங்கங்கே சிதறுண்ட நிலையில் பரவலாக வெளிப்படுத்தப்படும். கலையமிசங்கள் யாவும் தேரில் ஒருங்கே நெருங்கிய மையும் வண்ணம் வெளிப்படுத்தப்படுவது தேருக்குத் தனியழகைத் தருகின்றது. தேருக்குச் செலவிடநிதி பற்றாக்குறையினால் இலங்கையில் கோவில்களில், பெரும்பாலானவற்றில் தேரின் அடித்தளம் அழகுற அமைத்து கலைப்பொலிவுடன் விளங்கும் வாய்ப்பைப்பெறமுடியாத நிலை ஏற்பட்டது.

தேர்த்திருவிழா முக்கியத்துவம் பெற்றதற்கு இன்னொருகாரணமுமுண்டு தேர் பலவாறாகக் கோயிலின் அமிசங்களை ஏற்று நடமாடும் கோயிலாக விளங்குவதனால், கோயிலுக்குச்சென்று அங்கங்கே தரிசித் இன்புற்றுப் பயனுறவேண்டியவற்றைத் தேர் திருவிழாத்தினத்தில் வீதிகள்வழியே மக்களின் நடுவே பவனிவரும் தேரில்கண்டு பயன்பெறலாம் கோயிலைத்தேடி அடியவர் வலிந்து சென்று காணற்குரிய அரும்பெரும் காட்சிகளைக் கோவில் வடிவம் தாங்குந்தேர் அடியவர் குழுமியுள்ள வீதி வழியே அவரை அணுகி வரும்வேளை காணநேருவது ஒருபுதுவகை யநுபவத்தையும் பக்திவிரவிய, உள்ளக்கிளர்ச்சியையும் பெருக்குவதில் வியப்பெதுவும் இல்லை.

தேரமைப்பில் கலைவெளிப்பாடு இருவாறாக நிகழக்காண்கின்றோம். ஒன்று இதுவரை கூறப்பட்டவாறு கலைத்திறமை நிரந்தரமாக அடித்தளத்தில் பொறிக்கப்படுதல் இன்னொன்று. பீடம்முதல் மேலே தேரின் உச்சிவரை அமைக்கப்படும் தேரின் மேற்பகுதியினமைப்பில் தேரமைப்போரின் இன்னொருவகைத் திறனை வெளிப்படுத்தல் தேரின் மேற்பகுதி ஆண்டுதோறும் கட்டியமைக்கப்படுவதற்கே உரியது. திருவிழா நிறைவேறியதும் மேற்பகுதியைக்கலைத்து அகற்றிவிட்டு கீழ்ப்பகுதிக்குப் பாதுகாப்பு அளித்துப்பேணிவருவது வழமை. பாரதநாட்டின் தென்பகுதியில் அங்கங்கேயுள்ள பெருந்தலங்களில் தேர் இவவாறே அமையும் கோயிலின் மேற்பகுதியை நிகர்க்கும் வண்ணம் தேரின் மேற்பகுதியும் நுண்ணிய வேலைப்பாடுகள் கொண்ட தடிக்கட்டுகளால் அமைக்கப்பெற்று பலநிறங்கொண்ட துணிகளால் அலங்கரிக்கப்பட்டு தேருக்கு நிறைவான வடிவந்தந்து விளங்கும் இப்பகுதியை வர்ணச்சேலைகள் முகிலாப்புகள் துணியாலமைந்து தொங்கும் மாலைகள் கொடிகள் முதலியன அழகுறுத்தும் கோயிலின் மேற்பகுதியில் அமையவேண்டிய திருவுருவங்கள் முதலியன தேரில் அவ்வாறமை

யாது தேரின் அடிப்பகுதியிலே அமைவதற்குரியன என்பதிலேயேதேக்கும் கோயிலுக்கும் இடையே நாம்காணமுடிகின்ற வெளிப்படையான வேறுபாடு தேரின் மேற்பகுதியில் முடிவில் கோயிலில் அமையும் பண்டிகையை நிகர்க்கும் பண்டிகையும் அதன்நடுவே தூபியும் அழகுற அமைக்கப்பெறும் மேலும் இயற்கையில் பெருகிக்காணப்படும் கமுகு வாழை கரும்பு முதலிய பசுமைமிக்க இயற்கைப்பொருள்களைக் கொண்டும் கலைத்திறமை நன்கு வெளிவரும்வகையில் நிறைவுற அலங்கரிக்கப்பட்டதும் தேர் முழு அமைப்புப்பெறுகின்றது இவ்வாறு அவ்வப்போது தேர்த்திருவிழா நிகழு முன்னர் கட்டியெழுப்பித் தேருக்கு முழுவடிவந்தருவதில் ஈடுபடும் கலைஞர் தம்கலையை ஆண்டு தோறும் வளர்க்கவும் தம்திறமையை அடிக்கடி வளர்த்து வெளிப்படுத்தவும் சந்தர்ப்பம் பெறுகின்றனர் இலங்கையில், தேர்களின் மேற்பகுதியும் கீழ்ப்பகுதியை நிகர்த்து நுண்ணிதான கலைச்சிறப்புப் பொருந்தும்வண்ணம் உறுதிவாய்ந்த மரத்தினுல் அமைக்கப்படுவதனுல் தேரின மேல்பகுதியும் கீழ்ப்பகுதியைப்போன்று நிரந்தரமாகவே அமைக்கப்பெற்று விடுகின்றது ஆண்டுதோறும் தேரை அழகுசெய்யும் வாய்ப்புக்கள் இத்தேர்களில் ஏற்படுதில்லை இத்தேர்களிலும் துணிகளாலான மாலைகள் கொடிகள் முதலியன இடம்பெறுகின்றன. இந்தியாவில் அவ்வப்போது கட்டிஎழுப்பப் படுவது போன்று இலங்கையிலும் பெரும்பாலான ஆலயங்களில் தேரின்மேல்பகுதி திருவிழாவையொட்டி உருவாக்கப்படுவது இலங்கையில் இவ்வாறுருவாகும் தேர்களின் அடித்தளத்தில் கலைநுட்பம் விரவிய சிற்பங்களைக்காணுதல் அரிது. இலங்கையில் இவ்வாறு கட்டப்படும் தேரைக்கட்டுத்தேரெனவும் மரவேலைப்பாடுடன் மேலே அழகுறவமைத்து வர்ணந்தீட்டியழகுபொலிய வைக்கும் தேரைச்சித்திரத்தேர் என்று குறிப்பிடும்வழக்கம் இருந்துவருகின்றது முழுவதும் மரத்தால் சித்திரவேலைப்பாடு விரவ இவ்வாறு அமைக்கும் இறைவனூர்தி மஞ்சமெனப்படுவதையே வழக்கில் காணலாம்.

இவ்வாறு இருவகைகளாகத் தேர்அமையினும் தேரின் முற்புறத்தில் மரத்தால் அழகுற அமைக்கப்பட்ட நான்கு குதிரைகளைத் தேரை இழுக்கும் நிலையில்பூட்டி நிறுத்தி வைத்திருப்பதையும் அவற்றை ஓட்டும் நிலையில் சாரதியாக நான்கு முகங்களுடன் பிரமனை அமர்ந்த கோலத்தில் இருத்தி வைத்திருப்பதையும் பெரும்பாலும் எல்லாத்தேர்களிலும் காண்கின்றோம் எனினும் கோயில்களின் நிதிநிலை காரணமாக இலங்கையில்பிரமனும் குதிரையும் தேரில் காணப்படாத இடங்களுமுண்டு தமிழ்நாட்டில் இருக்கும் திருவாரூர்த்தியாகராசப் பெருமானுக்குரிய தேர் பெரும்பிரசித்திபெற்றது இதுவும் பீடத்தின் மேற்பகுதி அவ்வப்போது கட்டி அழகுபடுத்தற்குரியது திருவாரூர்த்தேர் அழகு என்ற முதுமொழியால் திருவாரூர்த் தேர் விதந்து பேசப்படும் தேரைப்பற்றிய பேச்சு நிகழும்போதெல்லாம் திருவாரூர்த் தேர் நினைவிற்கு வரும்.

கோயிலை நிகர்த்து அசைந்துவரும் கோயிலாகத் தேர் விளங்குவதையும், கருவறைக்கோ கோயில் முன்மண்டபத்திற்கோ இருமருங்கிலும் தேர்ச்சில்லுகள் அமைந்திருப்ப என்றும் அசையாது நிலைநிற்கும் தேராகக் கோயில் விளங்குவதையும் கருத்திலாழப் பதித்து கோயிலமைப்பையும் தேரமைப்பையும் நுணுகிநோக்கும் பொழுது ஒன்றுடன் மற்றையது பூண்டுள்ள தொடர்பைச் சிந்திக்கவைக்கும் சிந்தனைகள்உருவாகி விரிவான ஆராச்சிக்கு நிலைக்களனுய் அமையும்.

இறைவன் எழுந்தருளியிருக்கும் ஆலயம் கோயில் எனப்படும் இது அரசனின் வீடு, மாளிகை எனப்பொருள்தரும். தமிழ்நாட்டில் தஞ்சாவூரில் பெரியகோயில் இவ வடிப்படையில் அகழிகளால் சூழப்பெற்று அரண்மனையை நிகர்த்து அமைந்திருப்பது சிந்தனைக்குரியது கோயில் பெயரளவில் மட்டும் அரசமாளிகை எனநின்று விடாது அங்குள்ள அமைப்புக்களான அகழி, பிரமாண்டமான மதிற்சுவர்கள், வானளாவிய

கோபுரங்கள் விமானங்கள் ஆகியனவும் அங்குநிகழும் நிகழ்ச்சிகளும் அரசன்பெருமைக்கு ஏற்றவாறும் அரசனைப்போற்றுமாறும் நிகழ்வதையே நிகர்த்து நிற்கின்றன. அரசனுக்குரியனவாகிய கொடி குடை ஆலவட்டம் முதலிய ஆடம்பரமான உபசாரங்களும் அரசன் பவனிவரும் பொழுது இடம்பெறும் அணிவகுப்பு மரியாதைகளும் இன்னும் பிறவும் அரசனுக்குரிய உபசாரங்களாய் அமைவதுபோன்று கோயிலில் இறைவனுக்கும் நிகழ்த்தப்படுவன இவ்வரிசையில் அரசனுக்குரிய தேரும் கோவிலில் இறைவனுக்குரியதாகி விடுகின்றது. அரசனுக்குரிய தனிப்பண்பு வீரம் அரசன் வீரத்தை வெளிப்படுத்தும் இடம் போர்க்களம் வீரனாகிய அரசன் தேரில் இவர்ந்து போர்க்களத்தில் போர்புரிபவன் அவன்பவனிவருவதற்கும் தேர் பயன்படும் பண்டையகாலத்தில் அரசர்களது வீரம் அவர்க்குரிய தேருடன் தொடர்புபடுத்தியே மட்டிடப்பட்டுவந்தது அரசர்கள் பீமரதர்கள் அதிரதரிகள் மகாரதர்கள் என்றெல்லாம் போற்றப்பட்டனர் இவை அவர் வீரம் குறிக்கும் விருதுகளாயும் அமைந்தன தேவர்களுக்கெல்லாம் கோவான — அரசனை சிவபிரானைத் தலைசிறந்த வீரனாகவே சமயஉலகம் கண்டு சிந்தித்து வருணித்து வந்தது அவன்செயல்கள் வீரச்செயல்கள் இவற்றுள் பெரும் பிரசித்தி பெற்றவை எட்டு. இவை அட்டவீரட்டங்கள் எனப்பெயர் பெறுவன. இறைவனாகிய சிவபிரானின் திருக்கோலங்கள் வில், சூலம், வாள் முதலிய ஆயுதங்கள் ஏந்திநிற்கும் வீரக்கோலத்தில் காட்சிதருகின்றன. இவ்வீரனுக்கு இவ்வாயுதங்கள் போன்று தேரும் உரியதே இவன் வீரட்டங்களில் ஒன்றில் தேர்பற்றி விரிவாகப் பேசப்படுகின்றது இது முப்புரங்களை எரித்தநிகழ்ச்சி மூன்று அரக்கர்கள் மிகவும் கொடியவர்களாய் பெரும்பயமூட்டுபவர்களாய் உயிரினங்களுக்கு இன்னல் விளைவித்து வந்தனர் இவர்களுடன் போர்புரிந்து அவர்களை அடக்கி உயிர்களைக்காக்க இறைவன் திருவுள்ளம் கொண்டான் இதற்காக யுத்தத்திற்குப் புறப்பட்ட நிலையினைச் சமய நூல்கள் வருணிக்கின்றன கோயிற்சிற்பங்களும் இதை அழகாகச் சித்தரிக்கின்றன. மூன்று அரக்கருடன் போர்புரியவேண்டிய நிலை சிவபிரானுக்கு ஏற்பட்டது அரக்கர்களுக்குரிய புரங்களோ மூன்று இவை பறக்கும்புரங்கள் இதற்குரியவகையில் இறைவன் போர்க்கோலம் கொண்டான் இவர்ந்து சென்று போர்புரிவதற்குத் தேர் இவனுக்காக உருவாயிற்று சூரியசந்திரர்கள் அதன்சில்லுகள் வேதங்கள் நான்கும் தேரை இழுப்பதற்காகப் பூட்டப்பட்ட குதிரைகள் பிரமதேவனே தேருக்கு சாரதியாக அமருகின்றான் சுருங்கக்கூறின் பிரபஞ்சம் அனைத்தினையும் உள்ளடக்கி அதன் மறுவடிவமாக அமைகின்றது. தேர் இச்சந்தர்ப்பமொன்றில் மட்டுமே தேர் சிவபிரானுடன் தொடர்பு பெறக் காண்கின்றோம் வேதங்களிலே அவன்தேருக்கு உரியவன் தேராகவே அமைபவன். என்று குறிப்பாகவும் மறைபொருளாகவும் சிவபெருமான் பற்றிக்குறிப்பிடுவதும் உய்த்துணரற்பாலது இப்போரில் இறைவனுக்கு மேருவில்லாகவும் வாசுகி நாணாகவும் அமைந்தன விஷ்ணு வில்லாக அமைந்தது மட்டுமல்லாமல் அரக்கரின் அழிவு தன்னிலேயே முழுவதும் தங்கியிருப்பதையிட்டுப் பெருமையும் இறுமாப்பும் எய்தினர். இதையிட்டு இறைவனுக்குச் சிரிப்பு உண்டாயிற்று இது அட்டகாசமாகப் பரிணமித்தது இச்சிரிப்பே முப்புரங்களையும் எரித்துச்சாம்பராக்கிற்று இவ்வரலாறு புராணங்களில் விரிவாகக்கூறப்பட்டுள்ளது போர்புரிதல் அரக்கர்களைச் சங்கரித்தல் இங்குநிகழும் நிகழ்ச்சிகளானமையால் சிவபிரானுக்குரிய தேர்விழா சங்காரகிருத்தியத்தைச் சுட்டுவதாக விளக்கம்பெறும் இது ஏனைய தெய்வங்களுக்குரிய தேர்விழாவுக்கும் பொருந்தத்தலைப்பட்டது.

EVELYN RUTNAM LIBRARY

# நல்லூர் சட்டநாத ஈஸ்வரர் கோவிலின் தோற்றம் தொடர்பான சில பிரச்சனைகள்
## –ஒருவரலாற்றுக் கண்ணோட்டம்....

## CATTANATHA EESWARAR TEMPLE AT NALLUR
### Some Problemi Into its Origisn -

செ. கிருஷ்ணராசா, M. A.
விரிவுரையாளர், வரலாற்றுத்துறை
யாழ். பல்கலைக்கழகம்
14-3-1986

### அறிமுகம்

தலவரலாறு பற்றிய ஆய்வுகளானவை ஒருநாட்டினுடைய அல்லது ஒரு பிரதேசத்தினுடைய கலாசார மரபுகளை வெளிக்கொணருவதாக அமையும். ஏனெனில் தென்னுசியவாழ்வு முறையானது வரலாற்றுக்காலம் தொட்டு இன்றுவரை தலங்களையே மையமாகக்கொண்டு உருவாக்கம் பெற்றும், வளர்ச்சியடைந்து கொண்டமையுமே அதன் அடிப்படைக் காரணியாக அமைந்தது. இப்பிரதேசத்திலே மதமும், மனிதவாழ்வும் ஒன்றிலிருந்து ஒன்றினைப் பிரித்துப்பார்க்கமுடியாதளவுக்கு முறையே மணமும் மலரும் போன்று இணைந்துவிளங்குவதனை அப்பிரதேசமக்களது கலையையும் வாழ்வினையும் பற்றி ஆராயப்புகும் ஒருவர் நன்கு தெரிந்து கொள்வர் அவ்வகையில் கோவில்கள் அல்லது தலங்கள் தென்னுசிய மனிதவாழ்வின் உயிரோட்டமான மையங்களாக அப்பிரதேச மக்களுடைய வாழ்வு முறைகளை உருவாக்கி வளர்த்த களங்களாக விளங்கின என்றால் அது மிகையாகாது.

தென்னுசியாவிலே மனிதநாகரிக வாழ்வு முறையின் ஆரம்பம் எந்தளவுக்குப் பழமை வாய்ந்ததாக விளங்குகின்றதோ அதேகால எல்லைவரைக்கும் தலங்களின் தோற்றமும் மிகப்பழமை வாய்ந்ததாகக் காணப்படுகின்றது தென்னுசியாவின் தென் அந்தத்திலே இந்துசமுத்திரத்திலே ஒரு மிதிகல்லாக விளங்குகின்ற இலங்கைத்தீவின் நாகரிகத்தினைப் பொறுத்தவரையிற்கூட வைதீக மரபினைச் சேர்ந்த தலங்களினது தோற்றமானது அத்தீவினது வரலாற்றின் முன்னுரையாக அமைந்துள்ளமையைக் காணமுடிகிறது. இதனை நன்கு அவதானித்த போல் இ. பீரிஸ் என்ற சிங்கள ஆய்வாளர்கூட விஜயனது வருகைக்கு முன்பிருந்தே இலங்கையில் ஐந்து ஈஸ்வரன் ஆலயங்கள் இருந்துவந்தன எனவும் இந்தச்சிவாலயங்கட்கு இந்தியாவிலிருந்தும் மக்கள் வந்து வழிபட்டுச்சென்றனர் எனவும் குறிப்பிட்டுவிட்டு, அவ்வைந்து ஈஸ்வரங்களின் பெயர்ப்பட்டியலை பின்வருமாறு கொடுத்துள்ளார்.

அ) மகாதீர்த்தத்திற்கு (மாதோட்டம்) அருகிலுள்ள திருக்கேதீஸ்வரம்
ஆ) முன்னேஸ்வரம், இ) தொண்டேஸ்வரம், ஈ) திருக்கோணேஸ்வரம்
உ) காங்கேசன்துறைக்கு அருகிலுள்ள நகுலேஸ்வரம் என்பவையே அவையாகும்
~~1980~~

(கிருஷ்ணராசா ~~சா~~. செ., 1980)

---

இவ்வகையிலே இலங்கைத்தீவினது நாகரிக வாழ்வுக்கட்டுமானப்பணியிலே இச்சிவ - ஈஸ்வரக்கலாசாரம் முன்னுரையாகவும், ஆதாரமாகவும் அமைந்திருந்தபோது, இந்தியாவிலே பௌத்தமதத்தினது தோற்றத்துடன் அது உபகண்டத்திற்கு வெளியே, தென்னுசிய, தென்கிழக்காசிய, தூர கிழக்காசிய நாடுகளுக்கும் பரவி (அம்மத

மானது) வெளிநாட்டு ஆட்சியாளர்களையும் கவர்ந்து கொள்ளக்கூடிய ஒரு சமகாலச் சர்வதேசமதமாகவும் மாற்றம் பெற்றுக்கொண்டது. அதன்விளைவாக அவ்வப்பிரதேசங்களிலே மக்களுடைய வாழ்வுமுறைகளில் கலந்து, அவர்களை நாகரிகப்படுத்தும் ஒரு நிறுவனமாகவும் தொழிற்பட்டுக்கொண்டிருந்த நேரத்திலே, இலங்கையிலே, இந்த ஈஸ்வரக் கலாச்சாரமையங்கள் அவை மக்களுடன் கொண்டிருக்கக்கூடிய பிணைப்புக்களையெல்லாம் மெல்ல மெல்ல இழந்து, காலவோட்டத்திலே பௌத்தமதத்தினது செல்வாக்கின் பின்னணியிலே தமது சிறப்புக்களையெல்லாம் மறைத்த நிகழ்வினைக் காணக்கூடியதாகவுள்ளது இவ்வாறு இடம்பெறுவோர் நிகழ்விற்குச் சிறந்தவோர் உதாரணமாக அநுராதபுரத்திலுள்ள இசுறுமுனிய விகாரையை எடுத்துக்காட்டுவது மிகப் பொருத்தமாக அமையும். உண்மையிலே முனீஈஸ்வரம் (முன்னீஸ்வரம்?) என வழங்கப்பட்டு வந்திருக்கக்கூடிய இத்தலமானது பௌத்தத்தினது மேற்குறிப்பிட்டது போன்ற நிகழ்வினால் அதன் பெயரானது பின்முன்னாகத்திரிபடைந்து (ஈஸ்வரம் + முனி → ஈஸ்வரமுனி →) இசுறுமுனிய எனஇன்று ஒரு பௌத்தவிகாரைக்குரிய பெயராக வழங்கிவருவதனைக் காணலாம் — (Raghavan, M. D). இன்றும் இவ்விடத்திலே கஜலக்ஷ்மியினது சிற்பம், மாமல்லபுரத்தினையொத்த யானைகளது புடைப்புச் சிற்பங்கள், தீர்த்தக்கேணி போன்ற வைதீக சமயக்குறியீடுகள் எஞ்சிக்காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும் இவ்வாறு எத்தனை ஈஸ்வரங்கள் இன்று இசுருவாக உருச்சிதைந்துள்ளனவோ?

## பெயர்க்காரணம் பற்றிய ஆய்வு

யாழ்ப்பாணத்திலே, நல்லூரின் கண் அமைந்து காணப்படுகின்ற சட்டநாதர் என இன்று வணங்கப்பட்டுக்கொண்டு வருகின்ற கோவிலின் தோற்றம் பற்றிய நோக்கிலே, அதன் பெயர்க்காரணம் பற்றிய ஆய்வு முதற்படியாக அமைவதனைக் காணலாம். அவ்வகையில் இந்த ஈஸ்வரன் கோவிலின் திட்டவட்டமான பெயரினை அதாவது இன்றுவழக்கிலிருந்து கொண்டிருக்கின்ற பெயர்தான் அக்கோவிலின் தோற்றகாலத்திலேயும் வழங்கப்பட்டதா அல்லது உண்மையான அப்பெயர் மருவிச்சென்று இன்று வழக்கிலிருக்கும் நிலையை அடைந்து கொண்டதா என்பதனையிட்டுச் சற்றுச் சிந்திக்கவேண்டியுள்ளது. இதுதொடர்பான அடிப்படையான ஆதாரங்களைத் தேடிப் பெற்றுக்கொள்வதில் இன்றுமிகவும் கஷ்டமான ஒருநிலை காணப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இருப்பினும், யாழ்ப்பாண இராச்சியத்து ஆரியச்சக்கரவர்த்திகளின் வரலாற்றைக்கூறும் இலக்கிய நூலான யாழ்ப்பாண வைபவமாலையில் ஓரிடத்திலே முதன் முதலாக இக்கோவிலைப்பற்றிய குறிப்பொன்று இடம்பெறுவதனைக் காணமுடிகிறது.

> "...... நாலு மதிலும் எழுப்பி வாசலும் ஒழுங்காய் விடுத்து மாடமாளிகைகளும் கோபுரங்களும் பூங்காவும், பூங்கா நடுவிலே ஸ்நானமண்டபமும், மூப்புடைக்கூபமும் உண்டாக்கி அக்கூபத்திலே யமுனைநதித் தீர்த்தமும் அழைப்பித்துக் கலந்துவிட்டு நீதி மண்டபம் யானைப்பந்தி குதிரைப்பந்தி, சேனைவீரரிடருப்பிடம் முதலிய அனைத்தும் கட்டுவித்து கீழ்த்திசைப்பாதுகாப்பாக வெயிலுவந்தப்பிள்ளையார் கோவிலையும் மேற்றிசைக்கு வீரமாகாளியம்மன் கோவிலையும் வடதிசைக்குச்சட்டநாதேஸ்வரர் கோவில், தையல்நாயகியம்மன் கோவில் சாலைவிநாயகர் கோவிலையும் கட்டுவித்து .......... வாழ்ந்திருந்தான்"

யாழ்ப்பாண வைபவமாலையில் குறிப்பிட்ட இக்கோவிலின் பெயரினை உறுதிப்படுத்தும் பொருட்டு வேறு ஏதாவது சாசனச் சான்றுகள் அகப்படுமா என்று தேடியலைந்த பொழுது, எமக்கு முக்கியமானவொரு தாமிரசாசனம் கிடைத்தமையானது அக்கோவிலின் தோற்றம்பற்றிய ஆய்விலே புதியதொரு உத்வேகத்தினைக் கொடுத்து இக்கோவிலினது மணிக்கோபுரத்திலே இன்றுவரை பாவனையிலிருந்துவரும் ஆலயமணியிலே பொறிக்கப்பட்டுள்ள சாசனமானது யாழ்ப்பாண வைபவமாலையிலே கொடுக்கப்பட்டிருந்த பெயரை நன்கு உறுதிப்படுத்துவதாக அமைந்திருக்கின்றது. அச்சாஸனத்தின் வாசகம் வருமாறு:

| மூலம் | வாசிப்பு |
|---|---|
| சாலிவாகன சகாப | சாலிவாகன சகாப் |
| உ | உ |
| தம களஅது | தம் 1784 |
| கலியபதம நுகூகங | கலியப்தம் 4963 |
| துநதுபி வருஷம் | துந்துபி வருஷம் |
| யாழபபாணததைச சராநத | யாழ்ப்பாணத்தைச் சார்ந்த |
| நல்லூா சட்டநாதன கொ | நல்லூர்சட்டநாதன் கொ |
| யிலுக்கு சிவசமபு - ம | யிலுக்கு சிவசம்பு - ம |

யாழ்ப்பாண வைபவமாலையைப் பொறுத்தவரையிலே அதில் குறிப்பிடுகின்ற சட்டநாதேஸ்வரர் என்ற பெயரானது கி. பி 18ம் நூற்றாண்டுக்காலத்திலும் அதற்கு முன்பும் வழக்கிலிருந்து வந்திருக்கின்றது என்பதற்கு ஆதாரமாகின்றது தொடர்ந்தும் அடுத்துவந்த நூற்றாண்டிலே சட்டநாதன் என்றபெயர் வழக்கிலிருந்துவந்துள்ளது என்பதற்கு மேலேகுறிப்பிட்ட அத்தாமிரசாசனம் ஆதாரமாக அமைகின்றது அதே வழக்கு முறையே இன்றும் தொடர்ந்து வழங்கிவருவதனை நாம் காண்கின்றோம் இருந்த போதிலும் இக்கோவிலினது தோற்றம் தொடர்பாக பல ஐதீகங்கள் இருந்து கொண்டிருக்கின்றன என்பதனை வெளிக்கள ஆய்வின் போது நன்கு அறிந்து கொள்ளமுடிந்து. அந்தவோர் அடிப்படையே சட்டநாதர் கோவிலினது தோற்றம் தொடர்பாக மேலும் தொடர்ந்து ஆராய்வதற்கு உந்துசக்தியாக அமைந்தது.

## சட்டைமுனியும் சட்டைநாதரும்

இக்கோவிலினது தோற்றம் தொடர்பான ஐதீகங்களுள் சட்டைமுனி என்றழைக்கப்பட்ட ஒரு சித்தருடைய சமாதியே இக்கோவிலின் தோற்றத்திற்குக் கருவாக அமைந்தது என்பதும் நோக்கத்தக்கதாகும் பொதுவாகத் தென்னாசியக் கட்டிடகலைவரலாற்றிலே, பல்வேறுவகையான கோயில்களைக் குறிப்பாகத் தென்னாட்டில் காணமுடிகிறது அவற்றின் பெயர்கள் அக்கோவில்களின் அமைப்புக்கேற்றவாறு வழங்கப்படுவதனையும் காணலாம் ஆலக்கோயில், இளங்கோயில், ஈஸ்வரம், கரக்கோயில் கொகுடிக்கோயில் ஞாலற்கோயில் துங்கானை மடம் பெருங்கோயில் மணிக்கோயில் பள்ளிப்படை என்பன அவற்றுள் சிலபெயர் வடிவங்களாகும் (ஸ்ரீனிவாசன் C.R. 1968). இவ்வகையான கோயில்களுள் சமாதிக்கோயில்கள் அல்லது பள்ளிப்படைக் கோயில்கள் பெருமளவுக்கு ஈஸ்வரன் கோயில்களாகவே அமைக்கப்பட்டு வந்தன. என்பதற்கும் சான்றுகள் உள. இக்கோவில்களின் அமைப்புவழக்கானது கி. பி 9ம் நூற்றாண்டுக்கு முன்னர் தமிழ்நாட்டிலேயோ அல்லது தென்னிந்தியா இலங்கையிலோ நடைமுறையில் இருந்தது என்பதற்குச் சான்றுகள் ஏதுமில்லை (ஸ்ரீனிவாசன் C. R. 1968).

பொலநறுவையிலே கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதியிலே ஆழ்ந்து வெளிப்படுத்தப்பட்ட சிவாலயங்களுள் ஐந்தாவது சிவாலயம் ஒரு பள்ளிப்படைக்கோவிலாக அமைக்கப்பட்டிருந்தது என்பது அதனுட்புறத்திலிருந்து வெளிக்கொணரப்பட்ட சமத்தாழிகளினாலும் சின்னங்களினாலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வகையிலே சட்டநாதர்கோவில் தொடர்பான இச் சட்டைமுனி பற்றிய ஐதீகமானது எந்தளவிற்கு அக்கோவிலின் தோற்றத்துடன் தொடர்புபடுத்திப்பார்க்கலாம் என்பது அடிப்படைப்பிரச்சனையாக அமைகின்றது . ஏனெனில் ஐதிகமளவிலே சட்டைமுனியின் சமாதியுடன் தொடர்புடைய அச்சட்டைநாதஈஸ்வரர் கோவில் தொடர்ந்தும் அது ஸ்தாபிக்கப்பட்ட இடத்திலேயே இன்றுவரை இருந்துகொண்டிருக்கின்றதா என்பதையிட்டு ஏற்படும் சந்தேகமே அதற்குக்காரணமாகும்.

எவ்வாறாயினும் இலக்கியங்களிலே சட்டைமுனி என்றுகுறிப்பிடப்படுபவர், 10ம் 11ம், 12ம் நூற்றாண்டுகளிலே வாழ்ந்திருந்தனர் எனக்கொள்ளப்படும் சித்தர் பரம்பரையிலே ஒருவரான பாம்பாட்டிச்சித்தருடைய குருவாக இவர் குறிப்பிடப்படுகின்றார் (கலைக்களஞ்சியம், பாகம் 10, பக். 371) . பாம்பாட்டிச்சித்தருடைய பலபாடல்கள் நாத ஈஸ்வரனைத்துதித்துப் பாடப்பட்டவையாகவுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது இவ்வடிப்படையிலே பார்க்கும்போது இக்கோவிலின் தோற்ற வரலாற்றினை சட்டைமுனியுடன் தொடர்பு படுத்திப்பார்க்கலாமா என்றும் எண்ணத்தோன்றும். அக்கருதுகோளின் அடிப்படையிலே இந்தலத்தின் பெயர் சட்டைநாத ஈஸ்வரர் என்றோ அல்லது சட்டைநாதன் என்றோ வழங்கப்பட்டிருக்கவேண்டும் என்றும் கொள்ளலாம். இவ்வாறான ஒருமரபு இருக்குமாயின் அது நிச்சயமாக 18ம் நூற்றாண்டின் முன்னரேயே வழங்கிலிருந்திருக்கவேண்டும் ஏனெனில் யாழ்ப்பாண வைபவமாலையிலே அது சட்டநாதேஸ்வரர் என்ற அதன் மரூவுப்பெயராகவே கொடுக்கப்பட்டுள்ளது.

ஆகவே சட்டைநாதவீஸ்வரம் என்ற பெயர் இத்தலத்திற்கு வழங்கப்பட்டிருக்குமாயின் அது தொடர்பான சான்றுகள் ஏதாவது அப்பெயரினை உறுதிப்படுத்துகின்றனவா என்று நோக்குவது மிக மிக அவசியமானது சட்டநாதர் என்ற பெயர்வடிவிலே இந்து விக்ரஹவியல் கோட்பாடுகளில் எந்தவிதமான குறிப்புக்களும் இடம் பெறாத ஒருநிலையில் சட்டைநாதர் என்ற வடிவமானது மதுரைத் தமிழ்பேரகராதியில் (பாகம் 1, பக் அ02) சிவன், வயிரவன், இறைவன் என்ற பொருள் கொள்ளும் எனக்குறிக்கப்பட்டுள்ளது அவ்வகையிலே சட்டைநாதர் என்பது சிவனுடைய பைரவ மூர்த்தங்களுள் ஒன்று! "இரணியனைக் கொன்றதால் தருக்கித்திரிந்த நரசிங்கத்தை அடக்கி அதன் எலும்பைக் கதையாகவும் தோலைச்சட்டையாகவும் தரித்தவரே", சட்டைநாதர் என புராணரீதியான ஒருவிளக்கம் கொடுக்கப்பட்டுள்ளபோதிலும், (வள்ளவர்கோன், 1974) அதனை உறுதிப்படுத்தக்கூடியவகையில் எவ்விதமான சமய இலக்கிய வாதாரங்களோ அல்லது விக்கிரஹவியல் சான்றுகளோ கிடைப்பது அரிதாகவுள்ளது இவ்வாறான ஒருநிலையில் யாழ்ப்பாண வைபவமாலையில் குறிப்பிடப்பட்ட அப்பாகத்திலே, தையல்நாயகியம்மன் கோவில் பற்றிய குறிப்பானது அங்கே தவறுதலாக சட்டநாதேஸ்வரர் என்று மரூவுப்பெயராக இடம்பெற்றுள்ளதன்மையினையும் பதிலாக சட்டைநாத ஈஸ்வரர் என தையல்நாயகி என்ற பெயருக்கேற்ப இடம்பெற்றிருக்கலாம் எனவும் ஊகமாகக் குறிப்பிடலாம் இவ்வாறு இக்கோவிலினது பெயர்த்தோற்றம் தொடர்பாக எழுந்த பிரச்சனைகளின் அடியாக உதித்த ஒருகருதுகோளானது சோழப் பேரரசர்களுடைய காலத்துடன் இக்கோவிலினது தோற்றத்தினை எடுத்துக்காட்டுவதற்கு வழிகோலியது.

## சோழரும் சிவாலயங்களும்

தென்னிந்தியாவைப் பொறுத்தமட்டிலே கி. பி 9ம் நூற்றாண்டுடன் சோழப் பேரரசின் ஆதிக்கம் வளர்ச்சியடைந்தமையினை தென்னிந்திய வரலாறு கற்றோர் நன்கறிவர் அப்பேரரசின் விஸ்தரிப்புக்கும் திராவிடக்கலைகளின் வளர்ச்சிக்கும் அடிப்படையாகவிளங்கிய இருமாமன்னர்களான முதலாம் இராசராசன் முதலாம் இராசேந்திரன் ஆகியோர் பேராசஆற்புலத்திலே பல சிவன்கோவில்களையும் அமைத்தனர். தஞ்சைப்பெருவுடையார் கோவில் இவற்றுக்கெல்லாம் ஓர் உரைகல்லாக, திராவிட சிற்பக்கலைகளின் உச்சமான ஓர் உறைவிடமாக விளங்குவதனைக் காணலாம், அவ்வகையிலே இலங்கையும் சோழப்பெரும்பேரரசின் மாகாணங்களுள் மும்முடிச்சோழமண்டலமாக கி. பி 993க்கும் 1070க்குமிடைப்பட்ட காலத்திலே ஆளப்பட்டதன் விளைவாக இங்கும் பல சிவன்கோவில்கள் அம்மன்னர்களால் கட்டுவிக்கப்பட்டன. அவ்வாறான சிவன் கோவில்கள் முக்கியமான நிர்வாகமையங்களாக விளங்கியிருந்திருக்கக்கூடிய நகரங்களிலே நிறுவப்பெற்று அம்மன்னர்களுடைய பெயர்களினாலோ அல்லது விருதுப்பெயர்களினாலோ பெயரிடப்பெற்று பலதானங்களும் வழங்கப்பட்டமைக்கு இதுவரையில் இங்கு கண்டெடுக்கப்பட்ட சோழர்காலத் தமிழ்க்கல்வெட்டுகள் சான்றுகளாகின்றன. அவ்வகையில் முதலாம் இராசராசனது விருதுப்பெயர்களிலேயும் அழைக்கப்பட்ட பல சிவன்கோவில்களை தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் அறியமுடிவது இங்கு குறிப்பிடத்தக்கது. இரவிகுலமாணிக்கஈஸ்வரம், இராசராச ஈஸ்வரம், வானவன் மாதேவி ஈஸ்வரம் என்பன இலங்கையிலே சோழர்காலத்தில் அமைக்கப்பட்ட முக்கியமான கோவில்களாகும். இதில் வானவன் மாதேவி ஈஸ்வரம் என்ற பெயருடைய 2வது சிவாலயம் முதலாம் இராசராசனுடைய தாயாரினது பெயரில் பொலநறுவையிலே முழுமையான கருங்கற்களினால் கட்டப்பெற்றகோவிலாக இன்றுவரை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

தென்னிந்தியாவிலே முதலாம் இராசராசனுடைய விருதுப்பெயர்களிலே அமைந்த சிவாலயங்களாக அருமொழிஈஸ்வரம், இராசராஜஈஸ்வரம், சோழேந்திரஈஸ்வரம் ஜெயங்கொண்ட சோழஈஸ்வரம் என்பவை காணப்படுகின்றன. இவ்வகையிலே இலங்கையில் இச்சட்டைநாதஈஸ்வரர் கோயிலின் தோற்றம் தொடர்பாக முதலாம் இராசராசனின் விருதுகளில் ஒன்றான **ஜனநாதன்** என்பதனையும் இணைத்துப்பார்க்கக் கூடியதொன்றாக இருப்பது இங்கே நோக்கற்பாலதாகும்.

**ஜனநாதஈஸ்வரம்** என்ற நாமமே ஜடாநாதஈஸ்வரம் என்றாகிப் பின் ஜடைநாதவீஸ்வரம் எனத்திரிந்து சட்டநாதஈஸ்வரம் என இன்று வழங்கி வருகின்றது எனக்காணலாம். இக்கருதுகோளினை உறுதிப்படுத்துவதாயின் சாசன, இலக்கிய மூலாதாரங்களை எதிர்காலத்தில் தேடிப்பெறவேண்டிய ஓர் அவசியம் ஏற்படும் முதலாம் இராசராசனது விருதுப்பெயர் என்ற வகையில், ஜனநாதபுரம் என்றபெயர் அவர்களுடைய மும்முடிச்சோழமண்டலத்தின் தலைநகரான பொலநறுவைக்குச் சூட்டப்பட்டிருந்தது என்பதனையும் சாசனச்சான்றுகள் மூலம் அறிகின்றோம் ஆனால் தென்னிந்தியாவிலே இவ்விருதுப்பெயரினையுடைய சோழர்கோவில்கள் எவையும் காணப்படுபவையாக இதுவரை தெரியவில்லை அல்லது தென்னிந்தியாவிலே ஜனநாதபுரம் என்ற பெயரில் ஏதாவது நகரங்கள் காணப்பட்டிருந்தமைபற்றியும் இன்னும் தெளிவு ஏற்படவில்லை இலங்கையிலே திருகோணமலை, கந்தளாய், பதவியா, மாதோட்டம் நல்லூர் என்பன மும்முடிச்சோழ மண்டலத்தினது பிரதான நிர்வாக நகரங்களாக விளங்கியிருந்திருப்பன இவற்றுள் நல்லூரைத்தவிர ஏனைய மேலே குறிப்பிடப்பட்ட நகரங்களிலே இருந்திருக்கக்கூடிய சிவன் கோவில்களது பெயர்கள் சாசனச்சான்றுகளின் அடிப்படையில் வரலாற்றாய்வாளர்களினால் அடையாளம் காணப்பட்டுள்ளன.

ஆனால் நல்லூரைப் பொறுத்தமட்டிலே நல்லூரிலுள்ள ஒரு கோவிலுக்கு விளக்கு எரிப்பதற்காக அவ்வூர் சாத்தன் என்பவனால் சாவாமூவாப் பேராடுகளைத் தானமாக வழங்கிய சம்பவத்தினை யாழ்ப்பாணக்கோட்டையிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டு தற்போது யாழ்ப்பாண அரும்பொருளகத்திலே வைக்கப்பட்டுள்ள 1ம் இராசேந்திரனது கல்வெட்டிலிருந்து அறியமுடிகிறது (இந்திரபாலா, கா, 1971). யாழ்ப்பாணத்திலே கமால்வீதியிலேயுள்ள இடத்திலிருந்து சோழர்கால சிற்பக்கலைமரபினைத் தழுவிய வெண்கல கற்சிப்பங்கள் கட்டுபிடிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும் (இந்திரபாலா கா 1979). இத்தகையவோர் அடிப்படையிலே சட்டநாதவீஸ்வரர் கோயில் தொடர்பான தோற்றவரலாற்றினை ஆராயுமொருவருக்கு இராசராசனது விருதுப் பெயர்களில் ஒன்றான ஜனநாதன் என்பதுடன் இணைந்த ஜனநாதஈஸ்வரம் என்றபெயரானது பொருத்தமானதுபோல் கொள்ளவைக்கும் அவ்வகையிலே சட்டநாதவீஸ்வரர் கோவிலின் தோற்றகாலத்தினை இலங்கையிலேயுள்ள ஏனைய சோழர்காலத்துக்குரிய சிவன் கோவில்களின் காலத்துடன் இணைத்து நோக்முடியும் இருந்தும் தற்போது அமைந்திருக்கும் சட்டநாதவீஸ்வரர் கோவிலின் அமைவிடம்தான் அச்சோழர்காலத்திய ஜனநாதவீஸ்வரத்தின் அமைவிடமாக விளங்கியிருந்தது என்றுகொள்வதிற்கூட பலசிக்கல்கள் உள்ளன இச்சிக்கல்களை தொல்லியல் அகழ்வாய்வுகள்மூலமே நன்கு தீர்க்கமுடியும் என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

## முடிவுரை

சட்டநாதவீஸ்வரர் கோவிலின் தோற்றம் தொடர்பான சிலபிரச்சனைகள் என்ற இந்தஆய்விலே அக்கோவிலின் பெயர் தொடர்பான சிலபிரச்சனைகளைமட்டுமே இங்குகுறிப்பிடமுடிந்தது அவ்வகையிலே முன்வைக்கமுடிந்தஒரு கருதுகோளின் அடிப்படையிலே இக்கோவிலானது சோழர்காலத்துக்குரிய தொன்றாக எடுத்துக்காட்டமுயற்சிசெய்யப்பட்டமையை இங்குகாணலாம் அவ்வாறான ஒருமுயற்சி நிச்சயமாக வாதப்பிரதிவாதங்கட்குட்படும் என்பதும்தெளிவு இருந்தபோதிலும் தொடர்ந்துசெய்யப்படுகின்ற ஆய்வுகளிலேயும் அதன்மூலம் பெற்றுக்கொள்ளவிருக்கின்ற வரலாற்று விளக்கங்களிலிருந்துமே இச் ஜனநாதஈஸ்வரம் என்ற பெயரைக்கொண்டு விளக்கியிருக்கக்கூடிய சட்டநாதேஸ்வரர்கோயிலின் தலவரலாறானது தெளிவுறும் என்பது எமது நம்பிக்கையாகும்.

## அடிக்குறிப்புகள் :


மயில்வாகனப் புலவர், (1953) யாழ்ப்பாண வைபவமாலை
(பதிப்பு முதலியார் குல. சபாநாதன்) பக்கம் 26
ஸ்ரீனிவாசன், C. R. (1968) செந்தனை மலர் 2
இதழ் 1 பக் 3
Raghavan M D, (1963) India in Ceylonese History, Society & Culturre. P 74
Prof. Indrapala. Karthigesu (1971) Epigraphia Tamibca, Vol I, Part I, PP 52-56
பேராசிரியர் இந்திரபாலா கா., "கமால் வீதியில் அகழ்ந்தெடுக்கப்பட்ட சைவச் சிலைகள் வீரகேசரி (வாரமலர்) 1979 / மாசி / 11, 18,25.
வளவர்கோன், (1974) சங்கமம், மகாஜனக்கல்லூரி வெளியீடு.
கிருஷ்ணராசா, செ., (1980 "மாதோட்டம் ஒரு தொல்பொருட் களஞ்சியம்" வீரகேசரி (வாரமலர்) 1980 புரட்டாதி 8.

# கற்பகம்

பனை வளத்தின் பல்சுவையைப் பயன் பெற
நாடுவீர் பனம் உணவுப்பொருட்கள்

- உயிர்ச்சத்துகளுடன் ஊட்டச்சத்துகளும் நிரம்பியவை
- நவீன தொழில்நுட்ப அடிப்படையில்சுகாதாரமுறையில் தயாரிக்கப்பட்டவை
- சிறுபிள்ளைகள் முதல் முதியோர்வரை விரும்பிப்பாவிக்க உகந்தவை சக்தி மிக்கவை

## பனம் பானம்

பனம்பழச் சாற்றிலிருந்து தயாரிக்கப்பட்ட, சோடாவிற்குப் பதிலாக நாள்தோறும் பருகிச் சுவைத்திடச் சுவையூட்டப் பட்டபானம்.

## பனம்பழ இரசம்/கோடியல்

பனம்பழச் சாற்றிலிருந்து தயாரிக்கப்பட்டது நீருடன் கலந்து வீட்டிற்குவரும் விருந்தினர்க்குக் கொடுத்துமகிழ சுவையானபானம்

## பனம்பாணி (சிரப்)

பதநீரிலிருந்து தயாரிக்கப்பட்டது இனிப்பானது பாணுடன் பூசி உணவுப்பொருட்களுடன் சேர்த்துப்பாவிக்கக்கூடியது.

## பனம்பழ ஜாம், பனைவெல்லம்

சகல கற்பகம் விற்பனை நிலையங்களிலும்
பெற்றுக்கொள்ளலாம்


# இலங்கை பனை அபிவிருந்திச்சபை

தேசிய விடமைப்புச் செயலகம்
கண்டி வீதி
யாழ்ப்பாணம்

தொலைபேசி இல 23801, 22094

## நல்லூரில் கண்டெடுக்கப்பட்ட புராதன சிற்பங்கள்

யாழ் தொல்பொருள் காட்சிச்சாலையில் உள்ளவை



தெட்சணாமூர்த்தி



வள்ளி தேவசேனாசமேத சுப்பிரமணியர்



சனீஸ்வரன்

# அழகிய தேரில்மருவிய சிற்பங்கள் .....

தேரின் முன்பக்க மையத்திலிருந்து வலமிருந்து இடமாகச் சுற்றும்போது ...

1. இடபவாகனத்தில் இருவினைபோக்கும் அம்மையும், அப்பனும்.
2. விக்கினங்கள் போக்கும் விநாயகப் பெருமான்.
3. வைரவர்.
4. பாற்கடலில்...பாம்பணையின் மேற் பள்ளி கொள்ளும் பரந்தாமன்.
5. சிவன், பார்வதி திருக்கல்யாணக் காட்சி.
6. ஆண்பாதி,பெண்பாதியான அர்த்த நாரீஸ்வரர்.
7. மார்க்கண்டேயருக்காக காலனைக் காலால் உதைந்த காட்சி.
8. தில்லையில் நடராச நர்த்தனம்.
9. ஈழத்தமிழன் இராவணன் கயிலை எடுத்தமையும், அம்மையப்பன் அருள்பாலித்தமையும்.
10. திருவாணைக்காவில் சிலந்தியும், யானையும் சிவலிங்கப் பெருமானை பூசித்தமை.
11. தத்துவம் விளக்கும் மாம்பழ உற்சவக் காட்சி.
12. கண்ணப்ப நாயனாருக்கு காட்சி கொடுத்த கோலம்.
13. கொடியேற்றத் தத்துவம்.
14. பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படி பெற்ற திருவிளையாடல்.
15. கல்லாலின்கீழ் தட்சணாமூர்த்தியின் தத்துவக்கோலம்.
16. விஸ்வப் பிரமா.
17. தாண்டவமூர்த்தியின் நர்த்தன முத்திரை ஒன்று.
18. ஆரிய சக்கரவர்த்தி சட்டநாதரை வழிபடும் காட்சி.
19. சீர்காழி ஞானசம்பந்தருக்கு திருமுலைப்பால் கொடுத்த வரலாறு.
20. ஈழத்தின் இறுதித் தமிழ் மன்னன் சங்கிலியன்.
21. சிவலிங்க வழிபாடொன்று
22. சோமஸ்க்கந்த திருவுருவம்.
23. மகிடாசுரவர்த்தினி
24. தற்போதய சட்டநாதப்பெருமான் திருக்கோவில் முன்பக்கத்தோற்றம்
25. செண்பகப் பாண்டியன் அரசவையில் செந்தமிழ்ப் புலவன் நக்கீரனும் சிவபெருமானும் வாதிட்டு தருமிக்குப் பொற்கிளி கொடுத்த காட்சி.
26. கலைவாணியும், நான்முகனும்.
27. அன்னியராட்சிக் காலத்தில் இருந்த சட்டநாதர் சிவன்கோவிலை போர்த்துக்கீசர் இடித்தமை.
28. புள்ளிமயிலில் வள்ளி தெய்வானையுடன் காட்சி தரும் வேலவன்.



# உருவாக்கியவரின் உள்ளத்திலிருந்து....

திருவும் கல்வியும் சீரும் தழைத்தோங்கும் நல்லையம்பதியில் கோவில் கொண்டு அருளோச்சும் சட்டநாதர் ஆலயத்திற்கென ஒரு சித்திரத்தேர் உருவாக்குவதற்கு திருப்பணிச்சபையை நியாய துரந்தரர் திரு. கனகரத்தினம் தலைமையில் பிரம்மஸ்ரீ குமாரசாமிக்குருக்கள், பரஸ்கோ உரிமையாளர் திரு. இராசலிங்கம் அவர்களையும் மற்றும்பல அடியார்களையும் அங்கத்துவப்படுத்தி அவ்வூர்மக்களால் 1980ம் ஆண்டு உருவாக்கப்பட்டு செயல்பட்டுக் கொண்டிருக்கும் போது ஈழவளநாட்டிலே தலைசிறந்த சிற்பாச்சாரிகள் அனைவரிடமும் கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டன அவ்வேளையில் என்னுள்ளத்திலே அளவிடமுடியாத உணர்வலைகள் புரண்டன எம்பெருமானுக்கு உருவாகப்போகும் சித்திரத்தேரை நாம் உருவாக்கும் பாக்கியம் கிட்டாதா? என்று அவ்வாறு நாம் ஐயப்படுவதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன முன்னரே சில தேர்களை உருவாக்கிய சிற்பாச்சாரிகளின் கேள்விப்பத்திரங்கள் இரண்டு எம்முடைய திறமைகளைக் காட்டக்கூடிய அளவிற்கு திருத்தேரை உருவாக்கி ஆதாரம் காட்ட வாய்ப்புக்கிட்டாது போனமை இவை இரண்டும் எம்மிடம் காணப்பட்ட பலவீனம் ஆகும். நம்பிக்கைதான் மனிதவாழ்வு என்றுசொல்லுவார்கள் நடப்பவை நடக்கட்டும் என்ற எண்ணத்தில் நாமும் எனது விண்ணப்பத்தை சமர்ப்பித்தேன் பல இடர்ப்பாடுகள் மத்தியில் எம்மையெல்லாம் ஆட்டிப்படைக்கும் அன்னை பத்திரகாளியின் அனுக்கிரகத்தால் எம்பெருமானுக்கு சித்திரத்தேர் உருவாக்கும் வாய்ப்பு எமக்கு கிடைத்தது வேலையும் ஆரம்பிக்கப்பட்டு சுமார் இரண்டரை மாதங்கள் நடைபெற்று பின் பணம் இல்லை என்ற காரணத்தால் இடைநிறுத்திவைக்கப்பட்டது. ஆனுல் எம்மை பொறுத்தமட்டில் பணம் ஒரு காரணம் என்று ஏற்றுக்கொள்ளமுடியாது. ஏன் எனில் நாடுசீர்கெட்டு கொலுவிழந்து இருக்கும் இன்றைய காலகட்டத்திலே கூட வாரிவழங்கும் அடியார்கள் அன்றையகாலநிலையில் நிச்சயம் வாரி வழங்கியே இருப்பார்கள் என எம்மால் உறுதியாக கூறமுடியும் ஒற்றுமையும் ஊக்கமும் அருக ஒவ்வொருவரும் தடைப்பட்டுப்போகும் ஒவ்வொருகாரியங்களும் எல்லாம் அவன் செயல் என்று பிழைகளை அவன்தலைமேல் போட காலங்கள்பலகடந்தன மீண்டும் 1985ம் ஆண்டு ஆவணிமாதம் திருப்பணிச்சபை புனரமைக்கப்பட்டு அதில் முன்னைய உறுப்பினர்களுடன் பல இளையதலைமுறையினர் சேர்க்கப்பட்டனர் அவர்களுள் திரு. அ. வாமதேவன் திரு இ. சந்திரகுமார் திரு. கா. அரசரத்தினம் திரு. இ. ரகுமார் திரு. இ. ஜெயராசா ஆகியோர்களையே எம்மால் குறிப்பிடப்படமுடியும் இவர்களுடைய அயராத உழைப்பும் ஒற்றுமையும்தான் இன்று எம்பெருமானுக்கு உருவாக்கப்பட்டுள்ள சித்திரத்தேர் என்று எழுதுவதால் எந்ததவறும் இருக்கமுடியாது.


அடுத்தது எம்மால் உருவாக்கப்பட்ட சித்திரத்தேர் பற்றி சிலகுறிப்புக்கள்:-

முற்றிலும் சிற்பசாத்திர ஆகமமுறைகளுக்கமைய திராவிடக்கலையம்சங்களுடன் என்கோணவடிவுக்கமைய உருவாக்கப்பட்ட இத்திருத்தேர் வானம், கபோதகம்,

உருநாடு எண்கோணப்பண்டிகை வியாழக்கபோதகம் பத்மாசனம் சிங்காசனம் ஆகிய வரிவர்க்கங்களுடன் உருவாக்கப்பட்டு உள்ளன. தேரில் உள்ள சமய-வரலாறு சம்பந்த மான சிற்பங்களை அமைக்க ந. விஜயேந்திரனின் ஆலோசனைகள் பெரிதும் உதவின இவை அனைத்தும் குறிப்பிடத்தக்க அளவிற்கு சிறப்பாக அமைந்து இருக்கின்றன. இவை அனைத்தும் நான் உருவாக்கினேன் என்று எழுதிவிடமுடியாது ஏனெனில் முட்டைக்குள் கோழி, கோழிக்குள் முட்டை மனிதனுள் தெய்வம் தெய்வத்துள் மனிதன் என்று உயர் தத்துவத்துக்கு அமைய எம்மையெல்லாம் ஆட்டிப்படைக்கும் உன்னதப் பெருமானின் வெளிப்பாடுடையது.

மற்றும் இவ்வளவு சிறப்புமிக்க சித்திரத்தேரை உருவாக்குவதற்கு எம்மோடு தோளோடு தோள்நின்ற குழுவினர் அவர்களுக்கு காலமெல்லாம் நன்றிக்கடன் உடையேன்.

**ஸ்தபதி. க. செல்வராஜா**
— பிரதமஸ்தபதி —
கனகாலயசிற்பகூடம்
திருநெல்வேலி.



தேர் உருவாக மூலகர்த்தாவும், கோயில் பிரதமகுருவும்
அமரர் ச. குமாரசாமிக்குருக்கள்

## ஸ்ரீ நல்லைநாயகி சமேத நல்லைநாதராகும்

### சட்டநாதர்

# சித்திரத்தேரில் சிங்காரப் பவனி

சித்திரத்தேர் ஏறிவரும் சட்டநாத! - உமைச்
சிந்தனையாற் போற்றிசெய்வோம் சட்டநாதா
பத்தியுடன் பூசைசெய்வோம் சட்டநாத! - உமைப்
பாடுமன்பர் பயந்தீர்ப்பாய் சட்டநாதா
எத்திசையும் போற்றிடுவார் சட்டநாத! - இனி
எங்கவலை தீர்த்திடுவீர் சட்டநாதா
வித்தகனே விடையேறும் சட்டநாத! - எங்கள்
வேதனையைத் தீர்த்திடுவீர் சட்டநாதா
(சித்திரத்தேர்) - 1

தேரோடும் வீதிதனில் நல்லைநாத! - நீர்
தெருவோரம் எழுந்தருள்வீர் நல்லைநாதா
வேரோடும் வினைபோக்கும் நல்லைநாத! - நாம்
வேண்டும்வரந் தந்திடுவீர் நல்லைநாதா
பாரோடும் சங்கிலியன் நல்லைநாத! - அன்று
பறங்கியர்க்குத் தோற்றுவிட்டான் நல்லைநாதா
ஊரோடும் உன்திருத்தேர் நல்லைநாத! - எங்கும்
உயர்வாக வந்ததுவே நல்லைநாதா.
(தேரோடும்) - 2

வேறு

ஆடி வருகுது தேரங்கே - நன்றாய்
அசைந்து வருகுது தேரங்கே
பாடி மகிழுவோம் தேரங்கே - நன்கு
பார்த்து மகிழுவோம் தேரங்கே
ஓடி வருகுது தேரின்றே - மணி
ஓயா தொலிக்குது தேரின்றே
நாடி வருகுது தேரின்றே - நல்லை
நாயகி நாயகர் தாள்தொழுவோம்
(ஆடி) -3

கூடியே தேரை இழுத்திடுவோம் - உன்றன்
கோலப் பவனியைக் கண்டிடுவோம்
நாடியே அன்பா யிழுத்திடுவோம் - நல்லை
நாயகி யாளையும் வணங்கிடுவோம்
ஆடியே நின்புகழ் பாடிடுவோம் - எங்கள்
ஆண்டவன் சந்நிதி கூடிடுவோம்
தேடித் தேடொணுச் சிவனுரை - இன்று
சித்திரத் தேரினிற் கண்டிடுவோம்.

(கூடியே) - 4


"பழமுதிர் சோலை"
21, ஆடியபாத வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்

ஆக்கியோன் :
பண்டிதர் சு. இராசையா


1986-03-24

மழைத்தண்ணீர் மேட்டு நிலத்தில் தங்கி நிற்ப தில்லை பள்மான இடத்திற்கு ஓடி வந்து விடுகி றது. அதுபோல் ஈஸ்வரகிருபையானது தற்பெரு மையும் கர்வமு முள்ளவர்களுடைய உள்ளத்தில் தங்கிநிற்பதில்லை பணிவுள்ளவர்களின் உள்ளத்தில் தங்கிநிற்கும்.

— இராமகிருஷ்ணபரமஹம்சர்

நல்லை சட்டநாதர் சிவன் சித்திரப்பெருந்தேரில் எம்பெருமான் பவனிவரும் நன்னாள் எம் வாழ்நாளில் பொன்னாள் நம் நாட்டவர் மகிழும் திருநாள், அடியார்கள் அகம் மகிழும் பொன்னாள் !

# "விஜீ-கோ"

★ சகல வீட்டு மரவேலை ஒப்பந்தகாரருக்கு "விஜீ கோ"

★ சகல வீட்டுத் தளபாடங்களுக்கு "விஜீ கோ"

★ சகல மரத்தீராந்தி மரங்களுக்கு "விஜீ கோ"

**105, சட்டநாதர் வீதி, நல்லூர்**

# VIJIE-KO

**Timber Sawing Mill**

**105, Saddanathar Road, Nallur - JAFFNA.**

"சித்திரத்தேரின் தெருவோட்டம் — அன்று
பக்தர்கள் உள்ளங்களில் பெரும் களியாட்டம்"

# குகன் ஸ்ரோர்ஸ்



பலசரக்கு வியாபாரம்

**180, (380) ஆஸ்பத்திரி வீதி**

**யாழ்ப்பாணம்**

போன்: 24427

# Kughan Stores

General Merchant & Commission Agent.

**180, (380) Hospital Road, :: JAFFNA.**

ஈஸ்வரனின் தேரோட ஈஸ்வரனின் துணைகேட்டு நிற்கின்றோம் !

## பரஸ்கோவின் நல்

# வாழ்த்துக்கள்

- இரும்பு அலுமாரி, கதிரை, மேசை, ரி. வி. ஸ்ராண்ட் கட்டில், ஸ்ரூல், வீட்டுத்தளபாடங்கள் விற்பனைக்கு தொகையாகவும் சில்லறையாகவும் பெறலாம்.

- கேற், கிறில், ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

- வைத்தியசாலை, பள்ளிக்கூடம், காரியாலயம் விடு ஆகியவற்றின் விசேட தளபாடங்களுக்கு ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

திறமையான வேலை ! நியாயமான விலை !

# பரஸ்கோ

எஞ்ஜினியறிங் வேக்ஸ்

பருத்தித்துறை வீதி, — நல்லூர்


☎ 24102

நல்லை சட்டநாதர் தேரோட்டம் நிறைவுற கடவுளை வேண்டுகிறோம்

# A. RASIAH & SONS.

**69, K. K. S. ROAD, JAFFNA.**

ஈஸ்வரநின் தேர்ஊர இறைவனை வேண்டுகின்றோம்.!



# K. Ratnasabapathy & Sons

**131, K. K. S. Road, Gra.d Bazaar, JAFFNA.**

சட்டநாதர் தேரோட்டம் சிறப்புற வாழ்த்துகிறோம்!

# ராஜு ஸ்ரோர்ஸ்

67, 69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சகவித எசன்ஸ் வகைகள், பேபிமார்க் குளிர்பானங்கள், அலங்காரப்
பொருட்கள், அன்பளிப்புப் பொருட்கள், மின்மோட்டர்கள்,
மின் விசிறிகள், பிளாஸ்ரிக் சாமான்கள், நூதன விளையாட்டுச்
சாமான்கள், சுவர்மணிக்கூடுகள், கைக்கடிகாரங்கள், நெல் குற்றும்
மா அரைக்கும் யந்திரங்களும் அதன் உப உறுப்புகளும்
மற்றும் சகலவிதமான சாய்ப்புச் சாமான்களையும்
சகாய விலையில் பெற்றுக்கொள்ள சிறந்த ஸ்தாபனம்.

# RAJU STORES

67, 69, Kasthuriar Road, Jaffna.

## கோவில் அபிஷேகம், திருமண விழாக்கள், புதுமனைப் பிரவேசம், புதுமனைக்கு அத்திவாரமிடல்

முதலிய வைபவங்களுக்குத் தேவைப்படும்.

அபிஷேகத் திரவியங்கள், கஸ்தூரி, குங்குமப்பூ, கோரோசனை, புனுகு, ஜவ்வாது, சூடம், விளைவுசூடம், சாம்பிராணி, ஊதுபத்தி, வாசனைதிகள், பன்னீர், அத்தர், நவரத்தினம், பஞ்சலோகம் முதலிய சகல சாமான்களும் சந்தனம், குங்குமம், சாந்துப்பொட்டுகள் முதலியனவும் தங்கள் திருப்திக் கேற்றவகையில் மலிவாக எம்மிடம் கிடைக்கும்.

பச்சைச்சந்தனம் (உடன் யந்திரத்தில் அரைத்தது எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம்.)

# எஸ். சுப்பிரமணியம் அன்ட் கொம்பனி

(மருந்து, மருந்துச் சரக்கு வாசனைதிகள் வியாபாரம்)

191, (53) காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 22541

160, செட்டியார் தெரு, கொழும்பு - 11

தொலைபேசி: 35825

## நீங்கள் வெளிநாடு செல்ல வேண்டுமா?

உங்கள் வெளிநாட்டுப் பிரயாணத்திற்கான விமானடிக்கட்டுகளை யாழ் நகரிலேயே உடனுக்குடன் பதிவு செய்து கொள்ள நம்பிக்கையாக நாட வேண்டிய ஸ்தாபனம்.

# CROss TRAVEL SERVICES (PTE) Ltd.

**STAGE II No: 5, I st FLOOR,**
**Modern Market, Jaffna.**

**T' Phone: 22065, 22817**

இத்துடன் புதிய கடவுச்சீட்டு, **BOND** கடவுச்சீட்டு புதுப்பித்தல் ஆகியவையும் செய்து கொடுக்கப்படும். உங்கள் உள்நாட்டுத் தொலைத் தொடர்புகளை தாமதமின்றி பெற்றுக் கொள்ள நாடுங்கள்.

## Cross International Telecommunication Services

Telephone: 22040, 22816

சட்டநாத சிவனே உன்தேரோட்டம் காணகோடி கண்கள் காத்து நிற்கின்றோம் !

# க. செ. கைலாசம்பிள்ளை
# அன் சன்ஸ்

**மருந்துச்சரக்கு வியாபாரம்**

**5, (76) பெரியகடை :: யாழ்ப்பாணம்.**

எங்கள் வாழ்த்துக்கள் !

## NIFTHY MOTORS

150, K. K. S. Road,

Jaffna

தேர் ஓட வாழ்த்துகிறோம் !

## SALAMS

95, K. K. S. Road,

Jaffna

# மணியம்ஸ்

சகலவித

பிடவைத் தினிசுகள்

கூறைச் சேலைகள்

சிறுவர்கள், ஆண், பெண் அனைவருக்கும் ஏற்ற

பெல்ஸ், மிடிஸ்கேட்

மற்றும்

றெடி. மேட்

உடைகளுக்கும்

போன்: 23545

# MANIAMS

16, நவீன சந்தை, :: யாழ்ப்பாணம்.

வெள்ளோட்டம் நிறைவுபெற வாழ்த்துகின்றோம் !


M.T.SOMASUNDRAM
& SONS

★

199, Power House Road,
JAFFNA.

*Pettah Essence Suppliers*

223, Power House Road,
**Jaffna.**

**Sighams Pharmacy**

25,, Power House Road,
Jaffna

**A.Sinnadurai & Sons**

13, A. Bazaar Lane,
JAFFNA

வெள்ளோட்டம் நிறைவுபெற வாழ்த்துகின்றோம் !

**MOHAMEDALLY ABDULALLY**

★

Grand Bazaar,
JAFFNA.

***Sri Sai Stores***

141, Model Market,
Hospital Road,
**Jaffna.**

***Fashion House***

65, K. K. S. Road,
Jaffna

**VEMAKE**

27/3, Power House Road,
JAFFNA

# கிருஷ்ணாஸ்

பருத்தித்துறை வீதி, இருபாலை, கோப்பாய்.

மரத்தளபாடவேலை உருவாக்கங்களுக்கும்
வீடுகட்டும் வேலைகளுக்குரிய மரவகைகளுக்கும்
வீடுகட்டும் மரவேலை ஒப்பந்தங்களுக்கும்
சிறந்த ஸ்தாபனம்

# CRISHNA'S

**Point Pedro Road, Irrupalai, Kopay.**

---

**சுத்தமான சுவைமிகு
குளிர்பானங்களுக்கு
விஜயம்செய்யுங்கள்**



# லிங்கம் கூல் பார்

**52, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்**

# பெஷன் ஹவுஸ்

எம்மிடம்

**அலுமினியம், எவர்சில்வர் பாத்திரங்கள்,**
**பீங்கான் கோப்பைகள், சூட்கேஸ் வகைகள்,**
**அழகுசாதனப் பொருட்கள்,**
*** சிறுவர் சைக்கிள் ***

மற்றும்

**தற்கால நாகரீகத்திற்கேற்ற வகையில்**
**தயாரிக்கப்பெற்ற**
**நாகரிகப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள்,**
**அன்பளிப்புப் பொருட்கள்**

யாவும் நிதான விலையில் கிடைக்கும்.

# FASHION
## *House*

**65, K. K. S. Road, JAFFNA.**

★★★ காகோ

என்றதும்

ஆ.ம .....

உங்கள் ஞாபகத்திற்கு உங்கள் வீட்டில் இறக்குமதி செய்யப்பட்டவை போன்ற தளபாடங்களுக்கு இன்றே விஜயஞ் செய்யவேண்டிய ஸ்தாபனம்!

காகோ

குறைந்த விலையில் குறித்த தவணையில் மரங்கள் கொள்வனவு செய்து அரிவு செய்து பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்! 'காகோ'

சட்டநாதர் வீதி, நல்லூர்

---

உங்கள் வெளிநாட்டுப் பயண விமான டிக்கட்டுகளுக்கு தொடர்புகொள்ளுங்கள்.

ரஸ்ற் ரவல் சேர்விஸ்

11/A, மொம்சாக் கட்டிடம் ஸ்ரான்லி வீதி, யாழ்நகர்.

ரெலிபோன்: 24111

C.S.A., ஏரோபுளட், C.P. எயர், எயர் லங்கா ஆகிய விமானங் களில் விசேட கழிவுடன் டிக்கட்டுகளை பெற்றுக்கொள்ளலாம்.

Contact for your undeatable air ticket fares:-

TRUST TRAVEL SERVICE

11/A, Momsac Building, Stanley Road, JAFFNA.

T' Phone: 24111

Head Office: 65, Chatham Street Fort

| Passanger Sales Agent For AERO FLOT | G. S. A. For C. S. A. | G. S. A. For C PAIR |
|---|---|---|

உ
சிவமயம்

# எங்கள் நன்றி

திருவளர் நல்லூர் தன்னிற்
சிறப்புடன் வாழு கின்ற
பொருளெனுஞ் சட்டநாதர்
பொன்னடி வாழ்க நித்தம்
அருமறை யோர்கள் வாழ்க
ஆன்றநல் லறிஞர் வாழ்க
பொருணனி தேர்க்கு ஈத்த
புண்ணிய சீலர் வாழ்க

இங்ஙனம்

**ஸ்ரீ சட்டநாதர் தேவஸ்தானம் சித்திரத்தேர்த் திருப்பணிச் சபையார்**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

# ........ நன்றி

மூர்த்தி ஸ்தலம் தீர்த்தம் மூன்றும் சிறப்பாயுள்ள திருநல்லூர் சட்டநாத சுவாமிக்கு ஒரு சித்திர திருத்தேர் வெள்ளோட்டம். தேரின் அமைப்பும் அழகும் அற்புதமோ? சிவன் அருளோ? சித்திரததிருத்தேரை ஆக்க உதவிய தேர்த்திருப்பணிச் சபையார், ஸ்தபதி கனக செல்வராசா குழுவினர், வெள்ளோட்டச் சிறப்புமலருக்கு கட்டுரைகள், விளம்பரங்கள் தந்துதவியவர்கள், வெள்ளோட்ட மேளவாத்திய கோஷ்டியினர், இம்மலரை குறுகிய காலத்தில் பதிப்பித்துதவிய கண்ணன் அச்சகத்தார், பத்திரிகைகளில் கட்டுரைகள் வர உதவிய திரு. க. சி. இராசேஸ்வரன், திரு. க. கேசவன், செய்திவெளியிட்ட பத்திரிகைகள் திருப்பணி நிறை வெய்த நிதி பொருள் உதவியோர்கள், விழாவில் கலந்து கொண்டோர்கள் அனைவருக்கும்

நன்றி! நன்றி! நன்றி!

மலராசிரியர்



EVELYN RUTNAM LIBRARY
JAFFNA

## "திருக்கோயிலை வழிபடுங்கள்
## திருமுறையை ஓதுங்கள்"

மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக்கி யாதுமோர் குறைவில்லைச்
கண்ணில்நல் லஃதுறுங்கழுமல வளநகர்ப்
பெண்ணிலநல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே
போதையார் பொற்கிண்ணத் தடிசில்பொல் லாதெனத்
தாதையார் முனிவுறத் தானெனையாண்டவன்
காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்
பேதையா ளவளொடும் பெருந்தகை யிருந்ததே
தொண்டனை செய்தொழில் துயரறுத் துய்யலாம்
வண்டனை கொன்றையான் மதுமலர்ச் சடைமுடிக்
கண்துனை நெற்றியான் கழுமல வளநகர்ப்
பெண்துணை யாகவோர்பெருந்தகை யிருந்ததே
அயர்வுளோம் என்றுநீ அசைவொழி நெஞ்சமே
நியர்வனை முன்கையாள் நேரிழை யவளொடுங்
கயல்வயல் குதிகொழுங் கழுமல வளநகர்ப்
பெயர்பல துதிசெயப் பெருந்தகை யிருந்ததே
அடைவிலோம் என்று நீஅயர்வொழி நெஞ்சமே
விடையமர் கொடியினன் விண்ணவர் தொழுதெழுங்
கடையுயர் மாடமார் கழுமல வளநகர்ப்
பெடைநடை யவளொடும் பெருந்தகை யிருந்ததே


மில்க் வைற்
தயாரிப்புகளுக்கு
நீங்கள்கொடுக்கும் ஆதரவு
நாட்டுக் கும்மக்களுக்கும்
பயனுள்ள நற்பணி
களுக்கே.

# மில்க்வைற் சோப் தொழிற்சாலை

"திருஆலவாய்"
த. பெ. இல: 77, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்